52

ஸன்மார்க ப்ரதர்ஸிநீ.

ஓர் இனிய

மாதாந்திர சஞ்சிகை.

SANMARGA PRADHARSANI.

EDITOR

SASTRA RATNAM THETHIYUR

SUBRAMANIA SASTRIGAL.

ஒவ்வோரு இங்கிலீஷ் மாதம் முதல் தேதியன்று வேளிவரும்.

Vol. 1. | 1933வ அக்டோபர்மீ 1௨ | No. 2.

போருளடக்கம்.

நெ.		பக்கம்.
1.	சிவோத்கர்ஷம்	35
2.	பகவத்கீதை	49
3.	ஸ்ரீமத் ராமாயணம்	59
4.	ஜாதிபேதம்	71

தனிப்பிரதி அணா 2.

சிவோத்கர்ஷம்.

காரணவஸ்துதான் ஸகல பிராணிகளுக்கும் உபாஸிக்கத்தகுந்த தாக ஆகுமென்று வேதங்களில் கூறப்பட்டிருக்கின்றன. அந்தக் காரணவஸ்துவோ மஹாகைலாஸத்திற்கதிபதியான பரமேச்வரனாகத் தானாகவேண்டும். பரமசிவனைத்தவிர மற்ற சகல தேவதைகளையும் காரிய கோடியில்தான் சேர்க்கவேண்டியது. பரமசிவனை ஸம் ஹார கர்த்தா என்று ஒப்புக்கொள்வதில் எல்லா வாதிகளுக்கும் ஸம் மதமேதவிர, விவாதமேயில்லை. அவ்விதம் ஸம்ஹார காரணத்வம் பரமேச்வரனிடத்தில் விவாதமின்றி சித்தித்து விட்டது. இதனால் ச்ருஷ்டி காரணத்வமும் பரமசிவனுக்குத்தான் எற்படுகிறதென்றும் வெளியாகிறது. மற்றொருவனுடைய சக்தியினால் உண்டுபண்ணப் பட்ட காரியத்தை மற்றொருவனுக்கு அழிக்க ஸ்வாதந்தர்யம்கிடை யாது என்றதை யாரும் அறிந்ததே. இந்த நியாயத்தை அனுஸரித் தால் பரமேச்வரன் ஸர்வ ஜகத்தையும் ஸம்ஹரிக்கிறவனானதால் அவ னுடைய மாயா சக்தியினால் இந்த பிரபஞ்சமும் சிருஷ்டிக்கப்பட்ட தென்று சொல்லவேண்டியதாக இருக்கிறது.

வேறு விஷ்ணுவோ பிரம்மாவோ இவர்களுடைய சக்தி யினால் பிரபஞ்சமானது சிருஷ்டிக்கப்பட்டதா யிருந்தால் பரமசிவ னுக்கு அதை ஸம்ஹரிக்க பாத்தியதை எப்படி உண்டு. அத்துடன் எந்த காரியத்தினுடைய பிரளயத்திற்கு எது ஆச்ரயமாக ஆகிறதோ அந்த காரியத்தினுடைய உற்பத்திக்கும் அதுதான் ஆச்ரயமாக ஆகும் என்று உற்பத்திக்கும் பிரளயத்திற்கும் ஆச்ரயம் ஒன்றாகவே இருக்கவேண்டுமென்றும் ஸகல வாதிகளாலேயும்ஒப்புக்கொள் ளத்தகுந்தது.

மண்குடம், மண் வாணை, முதலானவைகளுடைய த்வம்ஸமானது மிருத்தில்தான் எற்படுகிறது. அந்த மண்குடம் மண்வாணை முதலானவைகளுக்கு உற்பத்தியும் அந்தமண்ணில்தான் எற்படுகிறதென்பது அநுபவ ஸித்தமானது. எந்த காரணத்தினின்று எந்த பதார்த்தம் உண்டாகிறதோ அந்த பதார்த்தம் அந்த காரணத்தில்தான் லயிக்கும். ஸகலமான பிரபஞ்சத்தினுடைய ஸம்ஹாரத்திற்கு பரமசிவனை காரணமாக எல்லா வாதிகளும் ஒப்புக்கொண்டிருக்கிறபடியால் பரமசிவனைத்தான் பிரபஞ்சத்தினுடைய சிருஷ்டி ஸ்திதி இவைகளுக்கும் காரணமாகச் சொல்லவேண்டும்.

தவிரவும் சேதனம் அசேதனம் என்ற இருவகையாக புலப்படும் இப்பிரபஞ்ச ஆகாரமாக பரிணமிக்கும் சக்தியானது பரமேச்வரனுடைய சக்தியாகத்தான் இருக்கவேண்டும். அப்படி பிரபஞ்ச ஆகாரமாக பரிணமிக்கும் சக்தியைத்தான் மாயா சக்தி என்று உபநிஷத்துக்களில் கூறப்பட்டிருக்கின்றன. அந்த மாயாசக்திக்கு ஜமானனும் பரமசிவன்தான் என்றே உபநிஷத்துக்களில் வியக்தமாக சொல்லப்பட்டிருக்கின்றன.

ஸ்மிருதியாகிய பகவத்கீதையில் விஷ்ணுவின் அவதாரமான கிருஷ்ணபகவான் மாயைக்குத்தான் யஜமானன் போல் சொல்லியிருப்பதால் மாயா சக்தி விஷ்ணுவினுடையதுதான் என்று எண்ணக்கூடாது. ச்ருதிக்கும் ஸ்மிருதிக்கும் விரோதம் வருகிறஸந்தர்ப்பத்தில் ச்ருதியை அநுசரித்தே ஸ்மிருதிக்கு அர்த்தம் செய்யவேண்டிய தவசியமானதினால் அந்த கீதையிலும் கிருஷணபரமாத்மா தான் பரமேச்வரனுடைய அபேதத்தை யடைந்த தன்மையினால் மாயை தன்னுடையது என்று சொன்னதாக ஆகுமே தவிர பரமேச்வரனைக்காட்டிலும் தான் வேறு என்று வைத்துக்கொண்டு தான் மாயைக்கு ஸ்வாமி என்று சொல்வதில் பகவானுக்கு அபிப்பிராயமேயில்லை.

ஒரு மனிதன் தனக்கு சொந்தமான சுவரில் எழுதப்பட்ட சித்திரங்களை தான் அழிக்கிறதுபோல் அன்னியனுக்கு சொந்தமான சுவரில் எழுதப்பட்ட சித்திரத்தை தான் அழிக்கமுடியுமா? அது போல் பரமேச்வரனும் தனது சக்தியாகிய சுவரில் சித்திரம்போல் பாஸித்துவருகிற நானாவிதமான இப்பிரபஞ்சத்தை தானே பிரளய காலத்தில் அழித்துவருகிறார். இதனால் ஸகல பிரபஞ்சத்தினுடைய ச்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் இந்த மூன்றுகளுக்கும் பரமேச்வரனே உபாதான காரணமாக ஆகிறானென்றது வெளியாகிறது. நிமித்த காரணமாகவும் பரமேச்வரன் தான் ஆகிறான்.

தனது சக்தி பிரபஞ்சமாக பரிணமிக்கிறதானாலும் அந்த சக்தியை, பிரதானமாக வைத்து, தான் அப்பிரதானமாக இருக்கும்பொழுது, தான் உபாதான காரணமாகவும், தான்பிரதானமாயும் சக்தி அப்பிரதானமாகவும் இருக்கும் பொழுது தான்நிமித்த காரணமாகவும் ஆகிறான். இதனால் அபின்ன நிமித்தோபாதானத்வம்'' பரமசிவனுக்கு சித்திக்கிறது. இந்த அபின்ன நிமித்தோபாதான காரணமான வஸ்துவைத்தான் உபாஸிக்கவும் வேண்டும். ஸகலவேதங்களுக்கும் பரம தாத்பர்ய விஷயீபூதமான அர்த்தமும் அதுதான் ஆகும். காரணவஸ்துவில்தான் வேத தாத்பர்யமானது சாஸ்திரங்களால் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால்வேதங்களுக்கு பரமசிவனைத்தவிர மற்ற வஸ்துவில் தாத்பர்யமே கிடையாது.

அத்துடன் அந்த பரமசிவனுக்கு ஏற்பட்ட "சிவ" என்ற நாமாவை கவனித்தாலும் அவனே ஸர்வதேவதைகளுக்குள் மேலான தேவதை என்று வெளியாகிறது. அதாவது "சிவ" என்ற பதத்திற்கு "வசகாந்தௌ" என்றதாது விலேனின்றும் ஸ்வரூபம் சித்

திக்கிறபடியாலும் வர்ணத்தினுடைய கிரமமாறுதலாலும் "காந்தௌ" "காந்தி" என்ற இடத்திலுள்ள இகாரம் சகாரத்திலும் அதற்கு பிறகு வகாரமாகவும் மாறி சிவ என்று ஏற்பட்டிருக்கிறது. இச்சையோடு கூடினவன் என்று அர்த்தம். சகல மனுஷ்யாளுக்கும் தேவாளுக்கும் ராக்ஷஸாளுக்கும் அசுராளுக்கும் தாரதம்யமில்லாமல் பொதுவாய் எல்லோருக்கும் ஹிதத்தை இச்சிக்கிறகாரணத்தால் தான் பரமமங்களரூபியாக இருந்துகொண்டு சிவ என்ற சப்தத்தின் பொருளாக பரமசிவனுகிறுன்.

லோகத்திலும் சிவ என்ற சப்தம் மங்களத்தை சொல்லுகிறது என்பது எல்லா வாதிகளாலும் ஒப்புக்கொள்ளத்தகுந்தது பிராணிகளும் மங்களத்தைத்தான் விரும்புவார்கள் என்பதும் பிரசித்தமானது. அந்த மங்களமான வஸ்துவும் இந்த பரமசிவன்தான் என்பது சிவ சப்தத்தால் வெளியாகிறது. அப்படியிருக்கும் பொழுது பரமசிவன்தான் உபாஸிக்கத்தகுந்த தெய்வமென்பதினும் உத்கிருஷ்ட தெய்வமென்பதிலும் வேறு பிரமாணத்தை தேடவும் வேண்டுமோ. மங்களம் என்றுல் சகல துக்கமும் நிவிருத்தியாய்த் தான் பரமானந்தத்தையடைவது என்பதே. துக்கத்தை நிவிருத்தி செய்யவேண்டுமானுல் அதற்கு காரணமான பாபங்கள் நிவிருத்தியானுல்தான் முடியும். அதனுல் சிவ என்ற சப்தத்தை உச்சரித்த மாத்திரத்தில் பிராணிகளுக்கு சகல பாபங்களும் நிவர்த்தியாகிறது என்று வெளியாகிறது.

இதை உத்தேசித்துத்தான் சகல வித்யைகளுக்குள் வேதம் மேலானதென்றும் அந்த வேதங்களுக்குள் ஸ்ரீ ருத்ரம் மேலானதென்றும் அதற்குள் சிவ என்ற இரண்டக்ஷரமானது மேலானதென்றும் சித்தாந்தம் செய்யப்பட்டிருக்கின்றன. கிரமமாக முக்

திக்கு சாதனமான உபாஸனங்கள் எவ்வளவோ விதமாக வேதங்களில் கூறப்பட்டிருக்கின்றன. அதுகளில் தகரோபாஸனம் என்பது ரொம்பவும் மேலானது. அதற்கு ஸமானமாக மற்றொரு உபாஸனங்களை சொல்ல முடியாது. அந்த தகரோபாஸனத்தில் உபாஸ்யமாக இந்த பரமசிவனைத்தான் நான்கு வேதங்களிலும் கூறப்படுகின்றன. அப்படியே மந்திரங்களுள் "காயத்ரீ"க்கு ஸமான மந்திரமே யில்லை. அந்த மந்திரத்திலும் இந்த பரமசிவனைத் தான பர்க்க என்ற பதத்தால் பொருளாக சொல்லப்பட்டிருக்கிறது. அதுபோல மேலான உபாஸனங்களிலோ, மந்திரங்களிலோ, கர்மாக்களிலோ, யோகங்களிலோ, சாஸ்திரங்களிலோ, தபஸ்ஸுகளிலோ, தீர்த்தங்களிலோ, க்ஷேத்திரங்களிலோ, இதிஹாஸபுராணுதிகளிலோ, பரமேச்வரனே பிரதான தெய்வமாக சொல்லப்படுகிறபடியால் பரமசிவனே மேலான தெய்வமென்பதில் நிரூபிக்கவும் வேண்டுமோ!

தவிரவும் பிராணிகளுக்கு காமனும் யமனுமே பெரிய சத்ருவாக சாஸ்திரங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியே அனுபவத்திலும் இருக்கிறது. மோக்ஷத்திற்கு காமன் சத்ருவாகிருன். போகத்திற்கு யமன் சத்ருவாகிருன். நல்ல ஸ்திரீ முதலானதுகளை அனுபவித்துக்கொண்டிருக்கும் நடுவில் அதிலும் நடுயௌவனத்தில் யமன் பிராணனை அபகரித்துக்கொண்டுபோய் விட்டானேயானல், போகத்தை நடுவில் இழந்துதானே யாகவேண்டும். ஆயுள் நீடித்து இருந்தால்தான் சகலவிதமான போகத்தையும் அனுபவிக்கமுடியும். அதற்குயமனை ஜயிக்கவேண்டியது அவசியமே. அவ்விதமே காமத்தால் ஜயிக்கப்பட்ட புருஷனுக்கு பரம்பொருள் தென்படாது வெகுதூரத்திற்கு அப்பால் அந்த பரம்பொருள் போய்விடும். மனதிலுள்ள காமம் தொலைந்தால்தான் பிரம்ம ஸாக்ஷாத்காரத்தை

யடைந்து முக்தனாக ஆக முடியும் என்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறபடியால் மோக்ஷ மார்க்கத்திற்கு காமனே சத்ருவாகும். இந்த காமனைப்பற்றி பகவத்கீதையிலும், இந்தக்காமன் மஹாபாபி என்றும், எவ்வளவு விஷயங்களை யனுபவித்தாலும் அந்த காமன் போதுமென்ற திருப்தியை யடையமாட்டானென்றும் சக்ஷுரேந்திரியம், சுரோத்திரேந்திரியம் க்ராணேந்திரியம், ரஸனேந்திரியம், த்வகிந்திரியம் என்று ஐந்துவிதமான ஞானேந்திரியங்களையும், மனதையும், புத்தியையும், இந்த ஏழு பதார்த்தங்களையும், காமன் தனக்கு துப்பு ஆட்களாக வைத்துக்கொண்டு ஜீவனை பிர்ம்ம பாவம் என்ற மோக்ஷத்திற்கு சாதனமான ஞானமார்க்கத்தில் போகவிடாமலே அதோகதியை யடையும்படியாக செய்கிறான், என்று பலவாறாக காமனுடைய தௌஷ்டயத்தைப்பற்றி வர்ணிக்கபட்டிருக்கிறது. ஆகையால் அந்தக்காமனையும் ஜயிக்கவேண்டியது அவசியம்.

மேல்சொன்னபடி யமனையும் ஜயிக்கவேண்டியது அவசியம். போகத்தை விரும்புகிறவர்களுக்கு, யமனும், மோக்ஷத்தைவிரும்புகிறவர்களுக்கு காமனும், சத்ருவென்றே தீர்மானிக்கவேண்டும். இந்தக்காமனையும், யமனையும் ஜயித்து லோகத்திற்கு உபகாரம் செய்த தெய்வம் எதுவென்று நாம் ஆலோசித்துப்பார்த்தால், நமது பரமேச்வரனைத்தவிர வேறு தெய்வம் இந்த உபகாரத்தைச் செய்ததாகத் தெரியவில்லை. மஹாவிஷ்ணுவும் பூமண்டலத்தில் எவ்வளவோ, அவதாரம் செய்திருந்தாலும், போகத்தை விரும்புகிறவர்களுக்குச் சத்ருவான யமனையோ, மோக்ஷத்தை விரும்புகிறவர்களுக்குச் சத்ருவான காமனையோ, நிக்ரஹம் செய்து லோகோபகாரம் செய்ததாக ஒரு நூலிலும் காணப்படவில்லை.

அவ்விதம் லோகத்திற்குப்பேருதவியைச் செய்தவர் இந்தப் பரமேஸ்வரனே.

காசி க்ஷேத்திரத்தில் வசித்துவந்த மஹரிஷிகளுக்குள் முக்ய மான மிருகண்டு என்ற முனி சிரேஷ்டருடைய, புத்ரனுன மார்க் கண்டேயன் என்ற மஹானுபாவன் புத்தி சக்தியில் ரொம்பவும் தேர்ச்சியை அடைந்தவனும், பரம தேஜஸ்வியாயும், தன் தாய் தந்தையர்களுக்கு இந்த மஹானுபாவன் தான் ஒரே குழந்தையாயும் வளர்ந்துகொண்டு 14 வயது முடிந்து, 15 வயது ஆரம்பமாவதற் குள் மஹா பண்டிதனும் ஆய்விட்டான். அந்த தாய் தந்தைகள் இந்தக்குழந்தையினுடைய வர்ச்சஸ்ஸையும், மஹிமையையும் பார்த்து பரம ஆனந்தசாகரத்தில் மூழ்கிக்கொண்டு வந்தார்கள்.

இத்தருணத்தில் தேவரிஷியான நாரதர் முதலான சில மஹ ரிஷிகள், தனது ஆச்ரமத்திற்கு ஒரு சமயம் வந்திருக்கும்பொழுது அவர்களிடத்தில் அந்தக்குழந்தையினுடைய தாய் தந்தைகள், அந்த குழந்தையினுடைய ஜாதகத்தைக்கொடுத்து அதில் முக்யமாய் ஆயுளைப்பற்றிக்கேட்டார்கள். அந்த மஹரிஷிகளும் ஜாதகத்தை நன்ருய்ப்பார்த்து, இந்தக்குழந்தைக்கு இப்பொழுது 15 வயது நடக்கிறது. 16வது வயது முடியவும் இந்தக்குழந்தைக்கு பிராண வியோகம் எற்பட்டுவிடும், இந்தக்குழந்தைக்கு 16 வயதுதான் ஜாதகரீதியாய் எற்பட்டது" என்று சொல்லிவிட்டு மஹரிஷிகள் போய்விட்டார்கள்.

அதைக்கேட்ட அந்தக்குழந்தையின் தாய் தந்தைகள், அதி லும் தாய் மிகவும் வருந்திக்கொண்டு, ஐயோ! இந்தக்குழந்தையை நாம் பெருமல் இருத்தல் நலம் என்று தோன்றுகிறதே. பெற்று எடுத்து வளர்த்து இவ்வளவுதான் என்று மதிக்கமுடியாத மஹிமை யையுடைய குழந்தையை நான் இழக்கப்போகிறேனே. என்னைப் போல் பாபியுண்டா அஹோ கஷ்டம் என்று அலரி தபிக் துக்கொண்டு ஸ்நானம் ஆஹாரம் முதலானதுகளைக் கூடச்செய்ய

உத்ஸாஹம் இல்லாமல் எப்பொழுதும் துக்கத்தால் பீடிக்கப்பட்டவளாகவே யிருந்தாள்.

இவ்விதம் இருக்கும் தாயாரை ஆச்ரமத்திற்கு வெளியில் குழந்தை ரிஷி குமாரர்களோடுகூட விளையாடிவிட்டு, தனது ஆச்ரமத்திற்குத்திரும்பி வந்து பார்த்தபொழுது, அந்தக்குழந்தை மார்க்கண்டனும், தானும் தாயுடைய துக்கத்தால் வருந்திக்கொண்டு, "அம்மா! ஏன் வருந்துகிறாய், நானொரு புத்ரன் இருக்கும்பொழுது உன் கண்ணினின்றும் ஜலம் கீழே விழலாமா, நீ ஏன் ஸ்நானம் செய்யவில்லை, ஆகாரம் பண்ணவில்லை எதற்காக கீழே குப்புறப்படுத்துக்கொண்டு அழுகிறாய், அதின் காரணம் என்ன சொல்லவேண்டுமென்று நமஸ்காரம் பண்ணி குழந்தை கேட்டவுடன், அவன் தாயாரும், முன்னிருந்த துக்கத்தைக்காட்டிலும், ஆயிரம் மடங்கு அதிகமான துக்கத்தை யனுபவித்துக்கொண்டு "அப்பா குழந்தாய், நீ ஒருவன் தான் எனக்கு புத்ரனாக ஜனித்தாய், உன்னை நான் அடைவதற்கு எத்தனை காலம் நானும், உன் தகப்பனாரும் பரமசிவனைக்குறித்து தபஸ்பண்ணினோம் என்றதைக் கணக்கிட்டு முடியாதப்பா, நீ நெடு நாளும் ஜீவித்து உன் மூலம் எனக்குப்பரலோகம் கிடைக்கும் என்ற எண்ணத்தை தெய்வம் கெடுத்துவிட்டது.

"இப்பொழுது உனக்கு 15 வயது நடந்துவருகிறது, 16 வயதுக்கு மேல் உனக்கு ஆயுள் இல்லை என்று மஹாரிஷிகள் சொல்லிவிட்டார்கள், அதை நான் கேட்டு நான் மஹாபாபியாக ஆய்விட்டேன், பிள்ளையைப்பெற்று அனுபவிக்க பாக்யமில்லாத மூதேவியாக நான் ஆய்விட்டேன் என்று நினைத்து வருந்துகிறேன், அப்பா நான் என்ன செய்வேன், வேறு குழந்தையும் எனக்கு இல்லையே, நான் என்ன செய்வேன் "என்று குழந்தையைக் கட்டிக்கொண்டு உச்சிமுகந்து பார்த்து தாய் கதறினாள்.

மார்க்கண்டேயனென்ற குழந்தையும் தாய்க்கு நமஸ்காரம் செய்துவிட்டு "எனக்கு இன்னம் 1 வருஷம் ஆயுள் இருக்கிறதே அம்மா, பரமேச்வரனுடைய ப்ரஸாதத்தால்தானே நான் உண்டானேனென்று நீ சொல்கிறாய். அந்த பரமேச்வரன் இப்பொழுது இல்லையா? அந்தப்ரபுவை நான் ஆராதித்து அவனுடைய ப்ரஸாதத்தால் என்னுடைய ஆயுளை நான் தீர்க்கமாக விருத்திசெய்துகொள்கிறேன். பரமேச்வரனுடைய ப்ர்ஸாதத்தை அடைந்த ப்ராணிகளுக்கு எதுதான் துர்லபம். என் நிமித்தமாக நீ வருந்தக்கூடாது. தாய்க்கு துக்கத்தை நிவிருத்திசெய்யப் பிள்ளையாகப்பிறந்தவர்கள், தாய்க்கு தன்னாலேயே துக்கத்தைக் கொடுத்தால் அவர்கள் பிள்ளையாக ஆகுவார்களா? ஆகையால் என்னுடைய நிமித்தமாக நீ துக்கத்தையடைவது உசிதமல்ல. எனக்கோ இன்னும் 1-வருஷகாலம் அவதியிருக்கிறது நீ எனக்கு இப்பொழுதே உத்திரவு கொடுக்க வேண்டும். பூலோகத்தில் உள்ள புண்ய தீர்த்தங்கள் எவ்வளவோ அவ்வளவு தீர்த்தங்களிலும் நான் ஸ்நாநம் செய்துவிட்டு, ஒவ்வொரு க்ஷேத்திரங்களாயும் சென்று ஆங்காங்கு மஹாலிங்கங்களையும் ஆராதனம் செய்து, பரமேச்வரனுடைய பிரஸாதத்தால் எனது ஆயுளை நான் விருத்திசெய்து உன்னுடைய சமீபம் வந்து சேருகிறேன் "நீ எனக்கு இப்பொழுதே உத்திரவு கொடுக்கவேண்டும்' என்று மார்க்கண்டேயனென குழந்தை தாயாரிடம் பிரார்த்தித்தான். தாயாரும் உடன் "சிவப்ரஸாதத்தால் நீ எப்படியாவது ஜீவித்தால் போதும் ஆகையால் போய் வா" என்று உ த் த ர வ ளி த் தா ள். மார்க்கண்டேயனென்ற பையனும், தாய் தந்தை இருவர்களையும் பிரதக்ஷண நமஸ்காரம் செய்துவிட்டு தீர்த்தாடனத்திற்காக கிளம்பி விட்டான்.

காசிக்ஷேத்திரத்திலிருந்து ஆரம்பித்து காசி, கோபர்வதம் கேதாரம், சோமநாதம், கோகர்ணம், மல்லிகார்ஜுனம், காஞ்சிபுரம், ராமேச்வரம், ஹாலாஸ்யம், பஞ்சநதம், மத்யார்ஜுனம், கௌரீ மாயூரம், சிதம்பரம், திருவெண்காடு முதலான க்ஷேத்திரங்களுக்கு கிரமமாகச்சென்று ஆங்காங்குள்ள புஷ்கரணிகளில் ஸ்நாநம் செய்து இரண்டொரு தினங்கள் க்ஷேத்திரவாசம் செய்து, மஹாலிங்கத்தையும் பூஜை செய்து, கிரமமாக திருக்கடையூர் என்ற தஞ்சாவூர் ஜில்லா, மாயூரம் தாலூகா, காவேரிசாகர சங்கமத்திற்கு அருகிலுள்ள க்ஷேத்திரம் வந்து சேர்ந்தான். அன்றோடு 16-வயது அநேகமாக முடிய இரண்டு நாள் மாத்திரம் மிச்சமாக இருந்தது.

ஆகிலும் அந்த மார்க்கண்டேயன் என்ற பையன் கொஞ்சம் கூட கவலைகொள்ளாமல் அங்குள்ள புண்ய தீர்த்தத்திலும் ஸ்நானம் செய்து, திவ்யமான புஷ்பங்களையும் வில்வ தளங்களையும் சம்பாதித்துக்கொண்டு, அந்த க்ஷேத்திரத்திலுள்ள ஜோதிர்மயமான மகாலிங்கத்தை ரொம்பவும் பக்தியோடு பூஜைசெய்து பரமேச்வரனுடைய ப்ரசாதத்தால் திவ்யமான தேஜஸ்ஸோடு கூடியவனாக அங்கிருந்து வந்தான்.

அப்படியிருக்கும்பொழுது அவனது ஆயுளின் கடைசி தினம் வந்தது. அன்றும் ரொம்பவும் தைர்யத்துடன் காலையில் ஸ்நானம் செய்துவிட்டு விபூதி ருத்திராக்ஷங்களை தரித்து மகாலிங்கத்தின் அருகில் சென்று ஒவ்வொரு வில்வதளமாக பரமேச்வரனது சிரசில் பக்தியுடன் அர்ப்பணம் செய்து தனது குறைகளையும் தீர்த்து வைத்து தன்னால் தனது தாய் தந்தைகளுக்கு யாதொரு விதமான துக்கமும் ஏற்படாமலிருக்கும்படிக்கு பிரார்த்தித்துக்கொண்டு மகாலிங்கத்தின் அருகிலேயே கையை கும்பிட்டுக்கொண்டு ஸ்தோத்திரம் செய்து வந்தான்.

இப்படி இருக்கையில் யமலோகத்திலும், யமன், காலன், அந்தகன் என்ற மூன்று தர்ம இராஜாக்களும் இந்த பையனின் ஆயுள் முடிந்து விட்டது என்றறிந்து தங்கள் அந்தரங்க காரியதரிசியான சித்ரகுப்தனை யழைத்து படாள் மூலமாக அந்த மார்கண்டேயன் என்ற பையனை தங்கள் லோகத்திற்குக் கொண்டு வரும்படி உத்திர விட்டார்கள். அந்த உத்திரவு பிறந்தவுடன் யமபடாக்களும் பாச க்கயிர்களைக் கையிலெடுத்து பயங்கரமான ரூபத்துடன் தண்டாயுத பாணிகளாக இப்பையன் இருக்கும் திருக்கடையூர் என்ற க்ஷேத்திரம் வந்து சேர்ந்து கோவில் பிரகாரத்திற்குள் நுழைந்து கர்ப்பக்கிருகத்திற்கு வெளியில் நின்று கொண்டு மஹா லிங்கத்தின் சமீபத்தில் நிற்கும் பையனை எமபடாள் கூப்பிட்டார்கள். அந்தப்பையனுக் கருகில் போவதற்கு எமபடாளுக்கும் பயம் தான்.

எமபடாள் கூப்பிட்டதற்கும் அந்த பையன் வாராததைக் கண்டு அவனுடைய தேஜஸ்ஸினாலும் அருகில் போக முடியாதவர்களாய்க் கொண்டு எமலோகத்திற்கே திரும்பிப் போய் விட்டார்கள். பிரயோஜனமற்று திரும்பி வந்த தங்கள் படாக்களைப் பார்த்து எமன், காலன், அந்தகன், மூன்று பேர்களும் பரம கோபத்துடன் கிரமமாக தாங்களாகவே ஒவ்வொருவராக வந்து இந்தப்பையனை எமலோகம் கொண்டுபோக யத்தனம் செய்தார்கள். அவர்களுக்கும் கெர்ப்ப கிருஹத்தில் நுழைவதற்கு முடியாமல் போய்விட்டது. அந்தப் பையனோ மஹாலிங்கத்தை கெட்டியாகக்கட்டிக்கொண்டு மிருத்திஞ்ஜெய ஸ்தோத்திரத்தால் பரமேசுவரனை சந்தோஷிக்கச்செய்து கொண்டு தனது ஆயுளை பிரார்த்தித்துக்கொண்டு வந்தான்.

எமனோ லிங்கமுள்பட தனது பாசக்கயிற்றால் அந்தப்பையனை கட்டி இழுக்கவேண்டுமென்ற உத்தேசத்துடன் கயற்றில் சுருக்குப்

போட்டு லிங்கத்தின் சிரஸில் வீசி எறிந்தான். அச்சமயம் பரமே சுவரனும் எமனுடைய தௌஷ்டியத்தையும் மார்க்கண்டேயன் என்ற பக்தனுடைய தைன்யத்தையும் பார்த்து கிருபையாலும் கோபத்தாலும் நிறைந்த உருவத்துடன் மஹாலிங்கத்திலிருந்து ஆவிர்ப்பவித்து அந்தகன் என்றவனை இடதுகாலால் உதைத்தும் எமனை சூலத்தால் குத்தியும் காலனை நெத்திக்கண்ணால் எறித்தும் இவ்விதம் மூன்றுபேர்களை தான் க்ரமமாக சம்ஹரித்து பக்தனை மார்க்கண்டேயனுக்கு தீர்க்கமான ஆயுளையும் கொடுத்து, என்றும் பதினாறுவயதுள்ளவனாகவே அந்தப்பையனுக்கு ஆசீர்வாதம் செய்து அனுக்கிரஹித்தார்.

அந்தப்பையனும் பரமேசுவரனுடைய அருளால் தீர்க்கமான ஆயுளை அடைந்து, தனது தாய்தந்தையர்களின் சமீபம் சென்று அவர்களுக்கு பரமானந்தத்தையும் கொடுத்துக்கொண்டு, இன்னமும் குலபதியான மஹரிஷியாகவே ஜீவித்து வருகிறார் என்பது நமது புராணப்பிரசித்தம்.

இவ்விதமான சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால் போக மார்க் கத்தில் சத்ருவான எமனை ஜெயித்து பக்தனைக்காப்பாற்றின பரமே சுவரனே மேலான தெய்வம் என்று சொல்லவும் வேண்டுமோ? அப்படியே மோக்ஷ மார்க்கத்தில் சத்ருவான காமனையும் இந்தப் பரமேசுவரன் தான் தனது நெற்றிக்கண்ணால் எறித்த மஹானு பாவன். மஹா கைலாசத்தில் ஒரு அழகான உபவனத்தில் வட விருக்ஷத்தினுடைய மூலப்பிரதேசத்தில் தக்ஷிணாமூர்த்தி அவசர மாக தான் ஆவிர்ப்பவித்து, ஸனகர் முதலான மஹரிஷிகளுக்கு பசு, பதி, பாசம் என்ற சித்தாந்த ரகஸியத்தை உபதேசம் பண்ணிக் கொண்டிருக்கும் சமயத்தில் தனது அருகில் வந்த காமனை தனது

நெற்றிக்கண்ணால் பரமேசுவரன் எறித்துவிட்டான் என்று ஸ்ரீமத் ஸ்காந்தம் முதலான புராணங்களின்மூலம் தெரிய வருகிறது. இதனால் மோக்ஷ மார்க்கத்தில் சத்ருவான காமனை எறித்தவர் பரமேசுவரனே.

தவிர, தேவாளும் அசுராளும் பாற்கடலில் அமிர்தமதனம் பண்ணின சமயத்தில் முதலாக அங்கு கிடைத்தது கால கூட விஷமே. அந்த விஷத்தின் காங்கையை சஹிக்காமல் தேவாதி தேவரும் அரண்டு ஒடின இடம் இன்னமும் ஒருவராலும் அறியப் படவில்லை. அவ்விதமான ஆபத்காலத்திலும் பரமேசுவரன் தான் ஆவிர்ப்பவித்து அந்த காலகூட விஷத்தை தான் சாப்பிட்டு ஜெகத்தை ரக்ஷித்தார் என்றதும் உலகப்பிரசித்தமானது. தனது குக்ஷியில் இருக்கும் ஜெகத்து எறியாமலிருப்பதற்காக உள்ளேயும், அந்த விஷத்தை விழுங்காமல் வெளியிலிருக்கும் ஜெகத்தை ரக்ஷிப்ப தற்காக வெளியிலும் கக்காமல் தனது தொண்டையிலேயே அந்த காலகூட விஷத்தை எப்பொழுதும் வைத்துக்கொண்டிருக்கும் காரணத்தால் 'ஸ்ரீகண்டன்', 'நீலகண்டன்' என்ற திருநாமங்களால் விளங்கி வருகிறார். இந்த விஷபானம் என்ற ஒரு லிங்கமே பர மேச்வரனே மேலான தெய்வம் என்பதற்குப் போதுமானது.

அத்துடன், பிராணிகளுக்கு நரகத்தைக் கொடுக்கும் பாபங் களை தனது ஸ்மரண மாத்திரத்தால் நசிக்கச் செய்து அந்த பக்தனை ரக்ஷிப்பதில் பரமேச்வரனைப் போல் வேறு எந்த தெய்வமும் கிடை யாது. அதற்கு அத்தாக்ஷியாக சந்திரனையேப் பார்த்துக் கொள்ள லாம்.

அந்த சந்திரன் தனது குருவானபிரகஸ்பதிபகவானுடையதர்ம பத்னியான தாரையினிடத்தில் சம்பர்க்கம் செய்த மஹா பாபத்

தோடு கூடினவனாக உலகத்தில் பிரசித்தி யடைந்தவனாயிருந்தாலும் அவ்விதமான சந்திரனும் பரமேச்வரனுடைய பக்தி விசேஷத்தால் தனது பாபத்திலிருந்து விடுபட்டவனாக ஆகி, பரமேச்வரனுடைய சிரஸிற்கு அலங்கார பூஷணமாகவும் விளங்கி வருகிறான். இதனால் பாபத்தை சமனம் செய்து வைப்பதிலும் பரமேச்வரனுக்கு சமான மாக வேறு ஒரு தெய்வமும் ஆகாது என்பது திண்ணம்.

தவிரவும், மந்திரங்களுக்குள் காயத்ரி மந்திரத்திற்கு மேலான மந்திரமே இல்லை. அந்த மந்திரத்தின் பொருளாகவும் இந்தப் பர மேச்வரன் விளங்கி வருகிறார். காயித்திரீ மந்திரத்திற்கு பரமேச் வரனைத்தவிர வேறு ஒரு பொருளையும் ஒரு வாதிகளாலும் ஒப்புக் கொள்ளமுடியாது. அந்த மந்திரத்தின் பொருளாக இருப்பதினா லும் பரமசிவனே சகல பிராணிகளுக்கும் உபாஸிக்கத்தக்க தெய்வம் என்பது சித்தமாகிறது.

(தொடரும்)

தேவை! தேவை!!

எல்லா ஊர்களிலும்

ஸன்மார்கப்ரதர்சினி.

விற்பதற்கும், சந்தாதார்கள் சேர்ப்பதற்கும்

எஜெண்டுகள் தேவை.

தகுந்த கமிஷன் தரக்கூடும்.

விவரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்;—

மானேஜர்,

"ஸன்மார்க ப்ரதர்சினி ஆபீஸ்"

14, வடக்குச் சித்திரை வீதி, மதுரை.

பகவத்கீதை.

(தொடர்ச்சி.)

திருதராஷ்டிரன் ஸஞ்சயனைப்பார்த்து சொல்லுவதாவது. 'ஹே ஸஞ்சயா ! பரிசுத்தமான ஸ்வபாவமுள்ள பாண்டுவின் புத்திரர்களாகிய தர்மபுத்திரர், பீமசேனன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன் என்ற இந்த ஐந்துபேர்களும் பகவானான ஸ்ரீ கிருஷ்ணனுக்கு ஐந்து பிராணன்களுக்கு சமானமான சிநேகிதர்கள். பிராணன்கள் ஒரு சரீரத்திற்குள்தானிருக்குமல்லவா? அதுபோல் பாண்டவர்களான ஐந்து குமாரர்களும், கிருஷ்ணனுக்கு, பிராணனுக்கு சமானமானவர்களானதால் அந்த கிருஷ்ணபரமாத்மா, பாண்டவர்களுக்குச்சரீரமாக ஆகிறார். ஐந்து விதமான பிராணன்களோடு போர் செய்யத் துணிந்தவர்கள், சரீரத்தைக் கொல்லாமல் அதற்குள்ளிருக்கும் ஐந்து பிராணன்களைக் கொல்ல முடியாததினால் சரீரத்தையே கொல்ல துணிந்தவர்களாக ஆகிறார்கள். அதுபோல் தர்ம புத்திரர் முதலான ஐவர்களோடு போர் செய்யத் துணிந்து கிளம்பின என்னுடைய குமாரர்களான துரியோதனன் முதலானவர்களும், தர்ம புத்திரர் முதலானஐவர்களும் கிருஷ்ணனுடைய பிராணனானதினாலும், அந்த கிருஷ்ணபரமாத்மா பிராணனான ஐவர்களுக்குச் சரீரமாயிருப்பதினாலும், கிருஷ்ணபரமாத்மாவோடு போர் செய்து அவரை ஹிம்ஸிக்காமல் தர்ம புத்திரர் முதலானவர்களை போர் செய்து ஹிம்ஸிப்பது அசாத்யமானதினால், கிருஷ்ணபரமாத்மாவோடு போர் செய்ய இச்சை யுள்ளவர்களாகத்தான் துரியோதனன் முதலானவர்கள் கிளம்பினார்கள் என்பது சித்தமாகிறது.

மோக்ஷத்தைக் கொடுக்கும் பகவானான ஸ்ரீ கிருஷ்ணனை மஹ ரிஷிகள்கூட சரணமடைகிறார்கள். அவ்விதமான பிரபு சக்ஷுரிந்திரியத்திற்கு கோசரமான சௌலப்யத்தை யடைந்து திவ்யமங்கள விக்ரகத்தோடு எதிரில் புலப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுதுகூட என் பிள்ளையான துரியோதனன் முதலானவர்கள் சரணமடைந்து ஜன்ம சாபல்யத்தையடையத் தெரியாமல் அந்த பகவானோடு போர் செய்தார்கள். பிறவியிலேயே குருடனாயுள்ள எனக்குள்ள புத்திதானே என் பிள்ளைகளுக்கும் ஏற்படும். தேவர்களுக்குக்கூட பக்தி பண்ண வேண்டிய ஸ்தானமல்லவா அந்த கிருஷ்ணபரமாத்மா அவ்விதமான பிரபுவினிடம் போர் செய்து மற்றவர்கள் பிழைக்க முடியுமா? தீபஜ்வாலையை கனியென்று நினைத்து விளக்கு வெட்டுப் பூச்சிகள், அந்த ஜ்வாலையில் விழுந்து மடிகின்றவைபோல் பகவானிடத்தில் குருடனான என்னுடைய பிள்ளைகளான துரியோதனன் முதலானவர்கள் விழுந்து மடிந்து விட்டார்கள். இதை நான் வெளியில் பிரஸ்தாபிக்க மனம் துணியுமா? இதைப்போல் நிந்திக்கத் தகுந்ததான கெட்ட காரியம் வேறொன்று உண்டா? தனக்குப்பதினொரு அக்ஷோகணி சேனையிருக்கிற கெட்ட அகங்காரம் பகவானிடத்தில் பலிக்குமா? பகவானுடைய பலத்திற்கு மேலான பலம் ஏது. பகவான் தனக்கு விரோதி என்று துரியோதனாதிகள் நினைப்பதும் தப்பு. தர்ம புத்திரர்கள் விரோதிகளானால் அவர்களாகிய ஐந்து பிராணன்களுக்கும் சரீரமாகிய கிருஷ்ணபரமாத்மாவும் தனக்கு விரோதியில்லையா? பகவான் தனக்கு விரோதியாக ஏற்படும் காரியத்தில் துரியோதனாதியர்கள் பிரவிருத்திக்காலமா? புத்தி மோசத்தால் ரொம்பவும் நிந்தியமான காரியத்தை துரியோதனாதிகள் செய்துவிட்டார்கள். இனி நான் ஸஞ்சயா என்ன செய்வேன்? என் பிள்ளைகள் செய்த கெட்ட காரியத்தை நினைத்தால் வெளியில்பிச்சை

யெடுத்து சாப்பிடக்கூட எனக்கு வெட்கம் ஏற்படுகிறது. குருட னுக்கு பிறந்த பிள்ளைகள் குருட்டு வழியில் போகின்றார்கள். தர்ம புத்திராதிகளின் பாக்யத்தைப்பார் சஞ்சய! அவர்களுடைய தகப் பனாரின் பெயரோ பாண்டு என்பதே!

ரஜோகுணமும், தமோகுணமும் அடியோடு ஒழிந்து கேவ லம் ஸத்வகுணம் மேலிட்ட ஸ்வபாவமுள்ள மனதோடு கூடின ஒரு மகா புருஷன் பாண்டு மகாராஜா என்பது அவர் பெயராலேயே விளங்குகிறது. அவ்விதமான மகானுபாவனுக்கு பிறந்த பிள்ளைக ளும் சாத்வீக வழியிலேயே போகிறார்கள். அவர்களோ தேவர் களுக்குக்கூட பக்தி செய்ய வேண்டிய ஸ்தானமாயும் தங்களுக்கு சரீரமாயும் உள்ள சர்வ லோக சரண்யனை கிருஷ்ண பரமாத்மா வினிடத்தில் திருடமான சினேகிதத்தை செய்து கொண்டு, எனது பிள்ளைகளான துர்யோதனாதிகளோடு போர் செய்து, இராஜ்யத்தை மாத்திரம் தான் அடைய வேண்டுமென்று இச்சையுள்ள வர்களாக யுத்த களத்திற்கு வந்தார்கள். இந்த விஷயம் யாவருக்கும் பிரசித்த மானது. அப்படி இருக்கும்பொழுது ஸமுத்ரத்தை ஆச்ரயித்து கிளிஞ்சல்களை வாரிக்கொண்டு வரப்போன ஒரு பரம தரித்திரனுக்கு விலை மதிக்கமுடியாத தான திவ்ய ரத்ன லாபம் எற்பட்டது போல, சமுத்திரம் போல் பரிபூர்ணமானகிருஷ்ண பரமாத்மாவை ஆச்ரயித்து கிளிஞ்சலுக்கு ஸமானமான துச்சமானராஜ்யத்தை அடைய விரும் பின பாண்டவர்களுக்கு, அத்வைத சாம்ராஜியராஜ்ய லாபமும் ஏற் பட்டதென்ற விஷயத்தை நினைத்துப்பார்த்தால் பாண்டவர்கள் மகா புருஷர்களென்றும், புண்யவான்களென்றும், அவர்கள் செய் தகாரியம் லோகோத்தரமான காரிய மென்றும் சொல்ல வேண்டிய தோடுங்கூட, பாண்டுவுக்கு அவர்கள் பிள்ளைகளாக பிறந்தது ரொம் பவும் பொருத்தமாக இருக்கிறது என்றும் சொல்ல வேண்டும்.

அர்ஜுனனுக்கோ யுத்தத்தில் ஒரு வ்யாமோகம் ஏற்பட்டது. அதாவது, பகவான் இரண்டு ஸேனைகளுக்கும் நடுவில் ரதத்தை கொண்டுபோய் நிறுத்தினவுடன் அர்ஜுனன் எதிர் கக்ஷியில் உள்ள விசிஷ்ட புருஷர்களை கவனித்து பார்த்தான். அங்கு தனக்கும், லோகத்திற்கும் பூஜ்யர்களான பீஷ்மர், துரோணர், அச்வத்தாமா முதலான பெரியோர்களை குறிப்பிட்டு பார்த்தான். உடன் அர்ஜுனனுடைய மனதில் இவ்விதமான பெரியோர்களைக்கொன்று நாம் ராஜ்யத்தை அடைவது தெய்வ சம்மதமாகாதென்று நினைத்து யுத்தத்தினின்றும் ஒழிவை அடைந்துவிட்டான். அது அர்ஜுனனுடைய கருணையினால் ஏற்பட்ட ஒழிவாயிருந்தாலும் சாஸ்திரத்துக்கோ லோகத்திற்கோ அது ஸம்மதமாகஆகாது. யுத்தகளத்திற்கு வந்த பிற்பாடு இந்த கருணை அழகாகுமா? ஜ்யோதிஷ்டோமம் என்ற யாகத்தை ஒரு பிராமணன் ஆரம்பித்து 4-தினமான பிறகு வபாஹோம தினத்தில் பசு ஹிம்ஸை கூடாதென்ற கருணை வந்தால் அது சாஸ்திர சம்மதமாகுமா? அதுபோல் க்ஷத்திரியனுக்கு இந்த யுத்தமென்பது ஸ்வதர்மமல்லவா? ஸ்வதர்மத்தில் ஏற்படுகிற ஹிம்ஸை விதியினால் ப்ராப்தமன்னியில் ராகத்தால் ப்ராப்தமாகுமா? ராகத்தால் ப்ராப்தமானஹிம்ஸையைத்தான் அஹிம்ஸா சாஸ்திரமும் நிஷேதம் செய்கிறது.

இவ்விதம் சாஸ்திரத்தின் உண்மை யிருக்க இதையறியாமல் தனக்கு ஸ்வதர்மமான யுத்தத்தை ஆரம்பித்து விட்டு பிறகு பீஷ்மர் துரோணர் என்று சொல்லிக் கொண்டு இந்த அர்ஜுனன் உபரதியடைவது சாஸ்திர ஸம்மதமாகுமா? லோகந்தான் இதை சம்மதிக்குமா. ஏதோ யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன் அர்ஜுனன் மார்தட்டினான் யுத்தகளத்தில் வந்து எதிர்கக்ஷியில் நிற்கும் வீரர்களை பார்த்தவுடன் பயம் ஏற்பட்டு நடுநடுங்கி அர்ஜுனன் உபரதி அடைந்து

விட்டான் என்று தானே லோகம் நிந்திக்கும். ஆகையால் அவன் உபரதி அடைந்தது லோக ஸம்மதமாகவும் ஆகாது.

இப்படி சாஸ்திரத்திற்கும் லோகத்திற்கும் விரோதமாக முரண்ட அர்ஜுனனை ஸமாதானம் செய்து அவனுக்கு யுத்தத்தில் எற்பட்டிருக்கும் ஸம்மோஹத்தையும் நிவர்த்திசெய்து யுத்தமாகிய ஸ்வதர்மத்திலேயே அந்த அர்ஜுனனை மறுபடியும் பிரவிருத்திக்கச்செய்வதற்காக பகவான்யத்தனம் செய்தார். அர்ஜுனனுக்குள்ள யுத்த ஸம்மோஹத்தை போக்கடிப்பதற்காக எற்பட்ட பகவத் ஸங்கல்பமானது இந்த யுத்த ஸம்மோஹத்தை காட்டிலும், கோடி மடங்கு மேலானதாயும், அநாதிகாலமாக அர்ஜுனனிடத்தில் வேரூன்றி தார்ட்யத்தை அடைந்ததாயும் உள்ள ஜன்மமரண ரூபமான ஸம்ஸார மோஹத்தையும் நிவர்த்திசெய்து, மோக்ஷ ஸாம்ராஜ்யத்திலும் அர்ஜுனனுக்கு மகாபிஷேகம் செய்துவைத்தது.

சஞ்சயா! இவ்விதம் இது நேரிடும் என்று யாராவது நினைத்ததுண்டா? பாண்டவர்கள்தான் நினைத்திருப்பார்களா? நீதான் ஒளிந்து அந்த சமயத்தில் சகல விருத்தாந்தத்தையும் கேட்டுக்கொண்டிருந்தாயே உனக்குத்தான் இந்த எண்ணம் உதித்ததா? இது ஒரு ஆச்சரியமான செய்கையல்லவா? பகவதாச்ரயத்தினுடைய மஹிமையே மஹிமை. சின்ன பலத்தை உத்தேசித்து, பகவானை ஆச்ரயித்தாலும் அந்த சின்ன பலத்தோடு எதற்கு மேலான பெரிய பலம் இல்லையோ அதுவும் எற்படுகிறது என்றதற்கு பாண்டவர் கிருஷ்ணபரமாத்மாவை ஆச்ரயித்ததைக்காட்டிலும் வேறு திருஷ்டாந்தம் சொல்லவும் வேண்டுமோ?

பாண்டவர்களுடைய பாக்யமே பாக்யம். கௌரவர்களுடைய தௌர்பாக்யமே தௌர்பாக்யம். பாண்டுவுக்குப்பிறந்த

பிள்ளைகளுக்கு அவர்கள் போனவழிதான் சரி. பிறப்பிலேயே குருடனாயுள்ள எனக்கு பிறந்த பிள்ளைகளுக்கு அவர்கள் போன வழியும் சரிதான். கௌரவர்கள், பகவானோடு சண்டைபோட்டு நாசத்தை அடைந்ததோ, பாண்டவர்கள் பகவானை ஆச்ரயித்து ராஜ்யத்தை அடைய இச்சித்தாலும் மகா பலமான அத்வைத சாம் ராஜ்யத்தை அடைந்ததோ, இதுகளை நினைக்க நினைக்க பிராணி களுக்கு கௌரவர்களிடமுள்ள மௌட்யமும் பாண்டவர்களிட முள்ள விவேகத்தன்மையும் நன்றாய் பிரகாசிக்கிறதென்பதில் ஆக்ஷே பணையே இல்லை.

அப்பா சஞ்சயா! பாண்டவர்கள் செய்த காரியம் ரொம்பவும் மேலானது. மகரிஷிகளுக்கும், ஆச்சரியத்தை கொடுக்கக்கூடியது. அவர்கள் பாக்கியமே பாக்கியம்" என்று திருதராஷ்டிரன் சஞ்சயனை பார்த்து சொல்லுகிற பகவத்கீதையின் முதல் அத்தியாயத்தின் முதல்ச்லோகத்திற்கு தத்வார்த்தமும் வெளியாகிறது.

இதனால் பகவத்கீதையினுடைய முழு அர்த்தமும் சுருக்கமாக சொல்லப்பட்டதாகவும் ஆகிறது. இரண்டு நிஷ்டைகளே கீதா சாஸ்திரத்தின் உண்மையான அர்த்தமாகும். அதில் ஒன்று கர்ம நிஷ்டை இரண்டாவது ஞான நிஷ்டையாகும். கர்ம நிஷ்டை என் பது உபாயமாகும். ஞானநிஷ்டை என்பது உபேயகமாகும். கர்மநிஷ்டை என்ற உபாயத்தால் அடையத்தகுந்த ஞான நிஷ்டை யென்ற உபேயம் தான் கீதாசாஸ்திரத்தின் ஸாரபூதமான அர்த்த மாகும். கர்மநிஷ்டை உபாயமானதால் அப்ரதானமாகவும் ஞான நிஷ்டை உபேயமானதினால் பிரதானமாகவும் அறியவேண்டும். அர்ஜுனனுக்கு பகவான் யுத்த ஸம்மோஹம் ஸம்ஸாரஸம்மோஹம் இரண்டையும் போக்கடித்தார் என்று முன்பு சொல்லப்பட்டிருப் பதினால் யுத்த ஸம்மோஹத்தை நிவிருத்திசெய்து ஸ்வதர்மமாகிய

யுத்தத்தில், அர்ஜுனனை பிரவிருத்திக்கச்செய்ததினால் கர்மநிஷ்டையாகிற உபாயத்தையும் ஸம்ஸார ஸம்மோஹத்தைப்போக்கடிக்க ஆத்மஞானத்தை உபதேசம் செய்ததினால் உபேயமாகிற ஞான நிஷ்டையையும் முதல்ச்லோகத்திலேயே பாண்டவர்களுடைய பக்ஷமாக பதங்களை அன்வயித்து அர்த்தத்தை பார்த்தால்மேல்சொன்ன இரண்டு நிஷ்டைகளும் வெளியாகிறபடியால் சாஸ்திரத்தினுடைய அர்த்தத்தை நாந்திச்லோகத்தில் சுருக்கமாக காட்டவேண்டுமென்ற மரியாதையை அனுஸரித்து ஸஞ்சயனைப்பார்த்து திருதராஷ்டிரன் கேட்கிற முதல்ச்லோகத்திலேயேகர்மநிஷ்டை யென்ற உபாயத்தால் அடையத்தகுந்த ஞானநிஷ்டை யென்ற உபேயமான கீதா சாஸ்திரத்தின் ஸம்பூர்ண அர்த்தமானது சூசிப்பிக்கப்பட்டதாக தெரிகிறது. இதுதான் திருதராஷ்டிரனுடைய உண்மையான அபிப்பிராயமாகும்.

இவ்விதம் வியசனத்துடன் கேட்ட திருதிராஷ்டிரனுக்கு, ஸஞ்சயன் பதில்சொல்லியதாவது. "இரண்டு கக்ஷிகளிலுள்ள சேனைகளும், யுத்த களத்தில் வந்து அ ழ கா க நின்றுகொண்டிருக்கும் பொழுது துர்யோதனன் பாண்டவாளுடைய சேனையைப்பார்த்து உடனே த்ரோணாச்சாரியாரிடம் சென்று சில வார்த்தைகளை ரகசியமாகச்சொன்னான் அதையும் நான் கவனித்தேன், அதாவது "ஹே ஆசாரியனே துருபத மஹாராஜாவின் புத்ரனும் தங்கள் சிஷ்யனுகவும் உள்ள திருஷ்டத்யும்னனால் சேனாபத்யம் என்ற பதவியானது வஹிக்கப்பட்டு அவருடைய ஆளுகைக்குள் பாண்டவாளின் சேனைகள் நின்றுவரும் அழகை தாங்கள் பார்வையிட்டீர்களா? பாண்டவர்களுடைய கக்ஷியிலுள்ள சகல மனிதர்களும் ரொம்பவும் விசிஷ்ட புருஷர்களாக இருந்து வருகிறார்கள். ஒவ்வொருவர்களும் பீமசேனனுக்கும் அர்ஜுனனுக்கும் சமானமான

பலத்தோடு கூடினவர்கள். ஆனால் அதைப்பார்த்து தாங்கள் பிரமத்தை அடையவேண்டாம். நமது கக்ஷியிலும் அநேக விசிஷ்ட புருஷர்கள் இருக்கின்றார்கள். தாங்கள் ஒருவரே போதாதா? இன்னமும் பீஷ்மாச்சாரியார், கர்ணன், அச்வத்தாமா முதலானவர்கள் உபகாரம் செய்வதற்கு நமது கக்ஷியில் இல்லையா? அநேக சூரர்கள் நமது விஷயத்தில்பிராணனைக்கூடவிட்டுநமக்குநன்மையைச் செய்வதில் சித்தர்களாக இருந்து வருகிறார்கள். அதனால் பீஷ்மர் சேனாபத்யத்தை வஹித்துக்கொண்டு அவருடைய ஆளுகைக்குள் இருந்துவருகிற நமது சேனைக்கு முடிவே இல்லை. பீமனால் ரக்ஷிக்கப்பட்டு வருகிற பாண்டவாளுடைய சேனைக்கோ ஒரு முடிவு உண்டு. அதாவது நமது சேனை அபரிமிதமானது. பாண்டவாளுடைய சேனை பரிமிதமானது பீஷ்மர் ஒரு மஹானுபாவன் நமக்கு சகாயமாக இருக்கிறவரையிலும் நமக்கு யாதொரு குறைவுமில்லை.'' என்று துரியோதனன் துரோணாச்சாரியாரிடம் சொன்னான்.

ஆனால் பாண்டவாளுடைய சேனையை துரியோதனன் பார்த்தவுடன் அந்த சேனையின் நடுவில் ரதத்தில் உட்கார்ந்திருக்கும் சாரதியான கிருஷ்ணபரமாத்மாவையும் தான் பார்த்த மாத்திரத்திலேயே துரியோதனன் பயத்துடன் கூடினவனாகஆகிவிட்டான். பாண்டவாளுடைய சேனையைப்பார்ப்பதற்குமுன் அவன் சுயோதனனாகயிருந்தாலும், அதாவது யுத்தத்தில் சந்தோஷமுள்ளவனாக யிருந்தாலும், பாண்டவாளின் சேனையைப்பார்த்தமாத்திரத்தில் அவனே துரியோதனனாக ஆகிவிட்டான். அதாவது யுத்தத்தில் பயமுள்ளவனாக ஆகிவிட்டான். துரியோதனன் என்ற பெயர் அதற்குப் பிறகுதான் அவனுக்கு பொருத்தமானதாக ஆனது.

உண்மையில் துரியோதனன் பாண்டவாளுடைய சேனையைப்

பார்த்தமாத்திரத்தால் பயத்தை அடைந்தவனாய் கொண்டு "யுத்தம் பண்ண உத்ஸாஹமில்லாமல் துரோணாசாரியாரிடம் போய், இதற்கு நாம் என்னவழியைத்தேடுவது, பாண்டவாளுடைய சேனையை பார்க்கும்பொழுதே என் மனம் நடுங்குகிறதே" என்ற தனது பயத்தை ஆசார்யனிடம் தெரிவிக்கவேண்டுமென்ற எண்ணம் உள்ளவனாக இருந்தபோதிலும், வெளிக்கு அதைக்காட்டாமலும் ஆசாரியனிடத்தில் சொல்லாமலும் தான் ரொம்பவும் தீரன்போல் வெளிக்கு நடித்து தைரியமான வார்த்தையைச்சொன்னானே தவிர, உண்மையில் துரியோதனனுக்கு உள்ளே பயம்தான். தனது சேனைக்கு பீஷ்மரை சேனாநாயகனாகவும் பாண்டவாளுடைய சேனைக்கு பீமனை சேனாநாயகனாகவும் தான் சொன்னதினால் பீஷ்மர் என்ற பதத்திற்குள் பீமன் என்ற பதம் அடங்கிவிட்டபடியால் பீஷ்மனுடைய உதவியைப்பெற்ற தனது சேனை ஜெயிக்கும் என்றும் பீமனால் ரக்ஷிக்கப்பெற்ற பாண்டவாளுடைய சேனைக்கு அபஜெயம்தான் என்றும் துரியோதனனுடைய எண்ணம்

ஆகிலும், அது அவனுக்கு அந்தரங்கமான எண்ணமாக அவன் நினைக்கவில்லை. தனது சேனைகள் பதினொரு அக்ஷௌஹிணிகளால் நிரம்பினதாகச்செய்யப்பட்டு பீஷ்மரான சேனாநாயகரால் அலங்கரிக்கப்பட்டதாயும் உள்ள தனது ஜெயத்திற்கு அந்த சேனையும் போராதததுதான். பாண்டவாளுடைய சேனையும் எழு அக்ஷௌஹிணிகளால் மாத்திரம் அலங்கரிக்கப்பட்டு பீமனுடைய ஆளுகையில் இருந்து வந்தாலும் சர்வ லோகங்களுக்கும் காரண பூதமான கிருஷ்ணபரமாத்மா அந்த சேனையில் நடுநாயகமாக இருந்து வருகிறபடியால்அவர்களுடைய ஜெயத்திற்கு அந்த சேனைபோதுமானதே. பகவானுடைய பலத்துக்கு சமானமான பலமுள்ளவர்களாக உலகமெல்லாம் சேர்ந்தாலும் ஆகுமா? ஏதோ யுத்தகளத்துக்கு வந்து

விட்டோம். இனி என்ன செய்கிறது என்று உள் பயத்தோடு கூடினவனாக இருந்தாலும் வெளிக்கு அதைக்காட்டாமல் தன் சேனைக்கு அளவு இல்லாததுபோலவும் பாண்டவாளுடைய சேனைகள் மிகவும் குறைச்சலானது போலவும், அதனால் தனக்குத்தான் ஜெயம்போலவும் பாண்டவர்களுக்கு அபஜெயம் போலவும், தான் ரொம்ப தீரன்போலவும் ரொம்ப கபடமாக தான் வெளிக்காட்டுவதோடு கூட துரோணாசாரியாரிடமும் இந்தக்கபட வார்த்தையையே வெளிக்காட்டினான்.

அத்துடன் துரோணாசாரியாரை அவமதித்தும் பேசினான். துரோணாசாரியாருக்கு எதிரிலேயே பீஷ்மருடைய சரீரம் அழியாதிருக்கிற வரையிலும் நமது கட்சிக்கு ஜெயம் உண்டாவதில் ஆட்சேபணையே இல்லை என்று சொன்னான். துரோணாசாரியாருக்கு எதிரில் பீஷ்மருடைய ச்ரேயஸை துரியோதனன்ப்ரார்த்தித்துக்கொண்டதினால் துரோணாசாரியார் உயிரோடு இருந்தாலும் அதனால் தன் கட்சிக்கு லாபம் இல்லாததுபோலவும் சூசிபித்து பேசினான். இது துரோணாசாரியாருக்கு, அவருடைய மனதுக்கு ஒரு தாங்கலை உண்டாக்காதா? இந்தப்பேச்சினால் ஆச்சாரிய திரஸ்காரம் என்ற மகா பாவத்தையும் துரியோதனன் சம்பாதித்துக்கொண்டதாகத் தெரிகிறது. இதனால்தான் துரோணாச்சாரியாரும் துரியோதனனுக்கு யாதொரு விதமானபதிலும் சொல்லவில்லை. இந்த துரியோதனன் பாண்டவர்களுடைய சேனையைப்பார்த்து பயந்துவிட்டான். அதற்கு நம்மிடம் வந்து ஒரு வழியைத்தெரிந்துகொள்ள ஓடிவந்தான். ஆனால் தான் அப்படி பயந்ததாக நம்மிடம் சொல்ல லஜ்ஜையை அடைந்து அதை மறைத்து ரொம்ப தைரியம் உள்ளவன் போல் நடிக்கிறான். அத்துடன் நமக்கு எதிரிலேயே பீஷ்மரை சிலாகித்தும் பேசுகிறான். ஆகையால் இவனோடு நமக்கு என்ன பேச்சு. நாம் ஒன்றும் பதில் சொல்லவேண்டாம் என்று நினைத்துத்தான் துரோணாசாரியார் துரியோதனனுக்குயாதொருவிதமான பதிலும் சொல்லவில்லை. (தொடரும்)

ராமாயணம்.

தாடகாவதம்.

(தொடர்ச்சி.)

சாக்ஷாத் ஸ்ரீராமனே பரம்பொருள் என்றே முன்பு நிரூபிக்கப் பட்டது. அந்தப் பரம்பொருள் இந்தப் பூமண்டலத்தில் திவ்வியமான மங்களவிக்ரகத்தோடு அவதரிப்பதற்கு பயனே தர்மஸ்தாபனம் தான். அவதார புருஷர்களிடம் தர்மலோபமானது எற்படுவதற்கு நியாயமுண்டா? அவர்களே சாஸ்திரத்துக்கு விரோதமான காரியத்தை செய்தார்களேயானல் மற்றவர்கள் போகும் வழி எது? அவதார புருஷர்களும் தான் தர்மத்தை அநுஷ்டித்துக்காட்டித் தானே மற்றவர்களை தர்மமார்க்கத்தில் பிரவர்த்திக்கச் செய்ய வேண்டும். இவ்விதமிருக்கும் பொழுது, அவதார புருஷரான ஸ்ரீராமர் விச்வாமித்திர மஹரிஷியினுடன் ஸித்தாச்ரமத்துக்குப் போகும் வழியில் தாடகை என்ற ஒரு ராக்ஷஸ ஸ்திரீயை வதம் செய்ததாக ஸ்ரீமத்ராமாயணத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது. ஸ்திரீ வதம் சாஸ்திர சம்மதமாகுமா? ஸ்திரீகளை எந்த அபராதம் செய்தவர்களாக இருந்தாலும் அவர்களைக் கொல்லக்கூடாது என்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றனவே. கருணைக்குப் பாத்திரமாக வல்லவா ஸ்திரீ ஜாதியை மஹரிஷிகள் அநுஷ்டித்துக்கொண்டு வந்திருக்கிறுர்கள். அந்த ராமாயணத்திலேயே, ஸுந்தரகாண்டத்தில் லங்கா நகரத்திற்கு, நகர தேவதையான இலங்கினி என்ற ஸ்திரீயோடு ஆஞ்சனேயர் போர் செய்த காலத்தில் அந்த இலங்கினியினல் சகிக்கமுடியாததான தாடனத்தை ஆஞ்சனேயர் பெற்றுக்கொண்டாலும், அந்த ஆஞ்சனேயரும் தனது கை முஷ்டியினுல்

அவளை ஒரு குத்துகுத்தி அவளை அவமதித்தார். ஸ்திரீ ஜாதி யென்று நினைத்து, ஆஞ்சனேயர் அவளைக் கொல்லாமல் விட்டார், என்று சொல்லப்பட்டு இருக்கின்றது. ஸ்திரீ வதை சாஸ்திரசம்மதமாகாது என்று தானே ஆஞ்சனேயர் அவளை உபேக்ஷித்து இருக்கின்றார். அது மாத்திரமல்ல. ஸ்ரீராமனே பஞ்சவடி தீரத்தில் தான் இருக்கும்பொழுது சூர்ப்பனகை என்ற ஒரு ராக்ஷஸ ஸ்திரீ தனது தர்மபத்னியான ஸீதையை பக்ஷித்து விடுகிறதான ஒரு உத்தேசத்துடன் தனது ஆச்ரமத்திற்குள் நுழைந்து தன்னோடும் லக்ஷ்மணனோடும் அநேகவிதமான பரிகாச வார்த்தைகளும் பேசி ஸீதாதேவியையும் பலவிதமாக நிந்தித்தும் அந்த ராக்ஷஸ ஸ்திரீ உபத்ரவப் படுத்தினள். அவ்விதம் துஷ்டையான சூர்ப்பனகையைக்கூட பகவானுன ஸ்ரீராமர் காதையும் மூக்கையும் அறுத்து அவளை விரட்டி விட்டார், என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அந்த இடத்திலும், ஸ்திரீயைக்கொல்லக்கூடாது என்ற தர்மசாஸ்திரத்துக்கு ராமர் பயந்தார் என்றுதானே சொல்லவேண்டும். இவ்விதம் ராமாயணத்திலேயே ஸ்திரீவதை கூடாது என்று சொல்லப்பட்டு இருக்கும் பொழுது அதற்கு விரோதமாக தாடகை என்ற ராக்ஷஸ ஸ்திரீயை பகவானுன ஸ்ரீ ராமர் எப்படிச்சொன்னுர்.

இந்த சந்தர்ப்பத்தில் ஸ்திரீகளை கொல்லக்கூடாது என்கிற தர்மசாஸ்திரம் ஸ்ரீராமருக்கு மறந்துவிட்டதா. அப்படி மரதி உள்ளவராக அவரை ஒப்புக்கொண்டால் அவரை அவதார புருஷராக எப்படி கருதமுடியும் அல்லது சாஸ்திரத்தையே உதாசீனம் செய்து தான் துணிந்து ஸ்திரீ வதை செய்தாரா? அப்படியானுல் நாமும் தற்கால சந்தர்ப்பத்தை அனுசரித்து சாஸ்திரங்களை மூட்டைகட்டி வைத்துவிட்டு, நமது இஷ்டம்போல் என் நடந்து கொள்ளக்கூடாது. அப்படி சாஸ்திர விருத்தமாக ஸ்திரீ வதையைச் செய்த ராமனை

தர்ம ஸம்ஸ்தாபனம் பண்ணுவதற்காக அவதரித்தவர் என்று எப்படி ஒப்புக்கொள்ளலாம்? ஸனாதன தர்மிகளுக்கு தர்மம் செழிக்க ஸ்திரீகளுடைய ரக்ஷையல்லவா அந்தரங்க சாதனமாகும் அப்படி இருக்கும்பொழுது ஒரு ஸ்திரீயை ஸ்ரீராமர் எப்படிக்கொன்றார்? அப்படி சாஸ்திர விருத்தமான காரியத்தைக் கொன்ற ராமரிடம் ஈஸ்வராம்சம் இல்லை என்றாவது சொல்லவேண்டும். அல்லது; ஈஸ்வரனுடைய அவதாரமாகிற ஸ்ரீராமனே சாஸ்திர விருத்தமான காரியத்தை செய்திருக்கிறபடியால் நாமும் காலத்தை அனுசரித்து சாஸ்திரம், சாஸ்திரம், என்று புலம்பிக்கொண்டு இராமல் நமக்கு இஷ்டமான காரியத்தை செய்து நன்மையை அடையவேண்டும்; என்று நினைத்து ராமருடைய ஆசாரத்தையே கைகொள்ளவேண்டு மா. லோகத்தில் தற்காலத்திலுள்ள பிராணிகளுடைய ஊக்கத்திற்கு இந்தத் தாடகாவதம் ஒரு சந்தோஷத்தைக் கொடுத்து, பிராணி களுக்கு சாஸ்திரத்தை அனாதரிப்பதில் ஒரு தைரியத்தைக்கொடுக் கிறதல்லவா? ஆகையால் அவ்விதமான சம்சயத்துக்கிடமில்லாமல் அதனுடைய தத்வத்தை எப்படி விசாரித்து நிர்ணயிக்கவேண்டு மோ, அப்படி விசாரமானது அவசியம் வித்வான்களால் செய்யப் படவேண்டும். தர்மத்தை ப்ராசாரப்படுத்துகிற ஸ்ரீ ராமாயணம் என்ற நூலில் உள்ள சகல விஷயங்களும் தர்மங்களே தான். ஆகையால் இந்த தாடகாவதத்தையும் தர்மம் என்று ருஜூப் படுத்துவது வித்வான்களுடைய கடமையாகும். ஸ்ரீராமரால் செய் யப்பட்டதால் இது தர்மம் என்று ருஜூப்படுத்தினல் போதாது. ஸ்திரீகளைக் கொல்லக்கூடாது என்கிற சாஸ்திரத்துக்கும் ப்ராமாண் யத்தைக் கெடுக்காமல் இதையும் தர்மம் என்று ருஜூ செய்தா லொழிய பிராணிகளுக்கு சனாதன தர்மத்திலும் அவதார புருஷர் களிடமும், ஸ்ரீமத் ராமாயணம் முதலான புராதன நூல்களிடமும்

நம்பிக்கை எற்படாது. ஆகையால் இதற்கு முன் சஞ்சிகையில் ஸ்ரீராம அவதாரத்தின் ரகசியத்தை வெளியிட்டதுபோல், இந்த இரண்டாவது சஞ்சிகையில், தாடகாவதத்தினுடைய ரகசியமானது விசாரிக்கப்படுகிறது.

தாடகாவதம் மேலான தர்மம் தான். ஸ்திரீகளைக் கொல்லக் கூடாது என்கிற சாஸ்திரத்திற்கும் ப்ராமாண்யம் கொஞ்சமேனும் குறையாது. அது எப்படி என்ருல் அதை நிரூபிக்கின்ரேம். அதாவது:—

ஸ்திரீகளைக் கொல்லக்கூடாது என்ற சாஸ்திரமானது நல்ல நடத்தை உள்ளவர்களாயும் பதிவிரதைகளாயும் உள்ள நல்ல ஸ்திரீகளிடம் தான் பொருந்தத்தக்கது. கெட்ட சுபாவம் உள்ளவர்களான துஷ்ட ஸ்திரீகளை கொல்லக்கூடாது என்று தடுப்பதற்கு அந்த சாஸ்திரம் பிரவிர்த்திக்காது. அதற்கு உதாரணமாக, பாஹிம்ஸையைத்தடுக்கும் சாஸ்திரத்தை எடுத்துக்கொள்ளலாம். அதாவது, ஒரு பிராணியையும் ஹிம்ஸிக்கக்கூடாது என்று அந்த சாஸ்திரத்தின் கருத்து. ஆகிலும் யாகத்தில் பசுஹிம்ஸையை பண்ணவேணுமென்று மற்ருெரு சாஸ்திரம் சொல்லுகிறது. இவ்விதம் ஹிம்ஸை கூடாது என்ற சாஸ்திரத்திற்கும் சத்கர்மாக்களில் ஹிம்ஸையை அனுமதிக்கிற சாஸ்திரத்திக்கும் பரஸ்பரம் முற்றிலும் விரோதம் எற்படுகிறது. சாஸ்திரத்துக்குள்ள விரோதத்தை பரிகாரம் பண்ணுவதே ஆஸ்தீகர்களின் கடமையாகும். உண்மையில் சாஸ்திரங்களில் முன்பின் விரோதமேயில்லே. அதனுடைய வியவஸ்தைகளைப்பிரித்து தெரிந்துகொள்ளாத பிராகிருதமான மனுஷ்யர்களுக்கு விரோதம் போல் தோன்றுகிறது. அந்தத் தோற்றத்தையும் பரிகரிக்க வேண்டியது அவசியம் தான். தனது ஆசையினுல் ஒரு பிராணியைக்கொன்று அதனுடைய மாம்ஸத்தை புஜிக்க வேண்டுமென்கிற

எண்ணத்துடன் அந்த பிராணியை ஹிம்ஸிப்பது ராகத்தால் ஏற்பட்ட ஹிம்ஸையாகும். தனக்கு ஆசை இல்லாமல் இருக்கும் பொழுதே சாஸ்திரங்களில் கூறப்படுகிற ஆக்ஞையை அநுசரித்து செய்கிற ஹிம்ஸையானது வைதமான ஹிம்ஸையாகும். இவ்விதம், ஒன்று ராகப்ராப்த ஹிம்ஸை, மற்றொன்று வைதமான ஹிம்ஸை. என்று இரண்டு விதமாக ஹிம்ஸைப் பிரிக்கப்பட்டு இருக்கின்றன ஹிம்ஸை கூடாது என்ற சாஸ்திரமானது பொதுவாக ஹிம்ஸையை நிஷேதிக்கிறபடியால் சாமான்ய சாஸ்திரமாகும். சத்கர்மாக்களில் ஹிம்ஸையை அநுமதிக்கிற சாஸ்திரம் ஒரு தேசத்தையும், காலத்தையும், ஒரு பிராணியையும், ஒரு அதிகாரியையும், குறிப்பிட்டுக் கொண்டு ஹிம்ஸையை அநுமதிப்பதினால் அது விசேஷ சாஸ்திரமாகும். விசேஷ சாஸ்திரத்துக்கும், சாமான்ய சாஸ்திரத்திற்கும் விரோதம் வாரமலிருந்தால் இரண்டையும் அநுஷ்டித்தே தான் தீரவேண்டும். விஷயம் வெவ்வேறாக இருந்தால் தான் விரோதம் வாரமலிருக்கும். ஹிம்சை என்ற ஒரே விஷயத்தைப்பற்றி ஒரு சாஸ்திரம் கூடுமென்றும் மற்றொரு சாஸ்திரம் கூடாதென்றும் சொன்னால் அது விரோதந்தானே. அந்த இடத்தில் இரண்டு சாஸ்திரத்தையும் சேர்த்து அநுஷ்டிக்க முடியாது. விசேஷ சாஸ்திரத்தைத்தான் அவலம்பித்து சாமான்ய சாஸ்திரத்திற்கு பொதுவாக ஹிம்சையை நிஷேதம் பண்ணவில்லை. மனுஷ்யனுடைய ராகத்தால் எற்பட்ட ஹிம்சையை அந்த சாமான்ய சாஸ்திரம் நிஷேதம் பண்ணுகிறது என்று சாமான்ய சாஸ்திரத்துக்கு சங்கோசம் செய்யவேண்டும்.

இதற்கு உதாரணமாகவும் ராமாயணத்திலேயே விபீஷண ஸ்வாமியை எடுத்துக்கொள்ளலாம். அதாவது, ஸீதாதேவி நிமித்தமாக, ராவணனுக்கும் ஸ்ரீராமனுக்கும் விரோதமானது ஏற்பட்டிருக்

கும் பொழுது, ராவணனை அனுசரிப்பதற்கும் ஸ்ரீராமனை பஜிப்ப தற்கும் பரஸ்பரம் விரோதம் வந்துவிட்டதே என்று விபீஷண ஆழ்வார் ஆலோசித்தார். பிறகு சாஸ்திரங்களை ஆராய்ந்து பார்த்து சாமான்ய தர்மத்திற்கும் விசேஷ தர்மத்திற்கும், விரோதமில்லாமல் இருந்தால் இரண்டையும் அனுஷ்டிக்க வேண்டியது தான். விரோதம் ஏற்பட்டால் சாமான்ய தர்மத்தைத் தள்ளி விசேஷ தர்மத்தைக் கைகொள்ள வேண்டும் என்ற நியாயத்தைக் கண்டு பிடித்து தனக்கு தகப்பனுக்கு சமானமான ராவணனுடைய அனு சரணை சாமான்ய தர்மம் என்றும் லோகநாதனான ஸ்ரீராமருடைய பஜனம் விசேஷ தர்மம் என்றும், அந்த இரண்டிற்கும் பிரகிருதத்தில் விரோதம் வந்திருப்பதினால் ராவணனுடைய அனுசரணை என்கிற சாமான்ய தர்மத்தை விட்டுவிட்டு ராமபஜனம் என்கிற விசேஷ தர்மத்தையே தான் அனுஷ்டிக்க முன் வந்து ஸ்ரீ ராமபிரானை சரணம் அடைந்தார், என்று சொல்லப்பட்டு இருக்கிறது. லௌகிக மான நியாயத்தையும் கவனிக்கலாம்.

அதாவது, ஒருவன் மற்றொருவனை கொலை பண்ணக்கூடாது என்று சட்டம் ஏற்பட்டு இருக்கிறது. ஆகிலும், ஒரு நியாயாதிபதி ஒருவனுக்கு கொலையை விதிக்கிறார். அந்த நியாயாதிபதி சொன் னது முன் சொன்ன சட்டத்திற்கு விரோதமாகுமா? ஒருவன் மற்றொருவனை கொலை செய்வதற்கு அவனிடத்தில் உள்ள த்வேஷம் காரணமாகிறது. நியாயாதிபதி கொலையை விதிப்பதற்கு அந்தகைதியி னிடத்தில் உள்ளத்வேஷம் காரணம் அல்ல. நியாயாதிபதிக்கு அந்த கைதியினிடத்தில் த்வேஷமும் இல்லை. மிகுந்த கருணை தான் நியாயாதிபதிக்கு அந்தக் கைதியினிடத்தில் ஏற்படும். ஆகிலும் அவனுக்குக் கொலையை விதிப்பதில் அந்த நியாயாதிபதி முன்வந்து இருக்கிறான். அதற்கு காரணமோ அந்தக் கைதி செய்த குற்றமோ

அந்தக் குற்றத்துக்குத் தகுந்த தண்டனை செய்விக்க வேண்டுமென்கிற சட்ட சாஸ்திரமோ தான் காரணமாகும். இந்த உதாரணங்களை நாம் கவனித்தால், ஸ்ரீராமர் தாடகையை வதம் பண்ணினது தர்மம் என்றே கருதலாம்.

பொதுவாக ஸ்திரீகளைக் கொல்லக்கூடாது என்ற சாஸ்திரம் சாமான்ய சாஸ்திரமாகும். ஸ்ரீராமர் தனக்கு பலை, அதிபலை என்ற இரண்டு ரகசிய வித்தைகளை உபதேசம் செய்த விஸ்வாமித்ர மஹரிஷி என்ற தனது குருவினுடைய ஆக்ஞையை அனுசரித்து தாடகையை வதம் செய்ததாக ராமாயணத்தில் தெரிகிறது. குருவான விஸ்வாமித்ர மஹரிஷியினுடைய ஆக்ஞையோ தாடகை ஸ்திரீயானாலும் அவளைக் கொன்றுவிடவேண்டுமென்பதே. சாஸ்திரமோ ஸ்திரீகளைக் கொல்லக்கூடாது என்று சொல்லுகிறது. பிரகிருதத்தில் குருவினுடைய வார்த்தைக்கும் தர்மசாஸ்திரத்திற்கும் விரோதம் வந்துவிட்டது. ராமபிரான் மகா புத்திமான் ஆனதால் "ஸ்திரீகளைக் கொல்லாதே" என்ற சாஸ்திரத்தை சாமான்ய சாஸ்திரமென்றும் "தாடகையைக் கொல்லு" என்று சொல்லுகிற தனது குருவின் வார்த்தையை விசேஷ சாஸ்திரமென்றும், விசேஷ சாஸ்திரத்தை அனுசரித்துத் தான் சாமான்ய சாஸ்திரத்துக்கு அர்த்தத்தைச் சொல்லவேண்டுமென்றும், நிர்மாணித்து "ஸ்திரீகளைக் கொல்லாதே" என்ற சாமான்ய சாஸ்திரத்திற்கு நல்ல நடத்தையுள்ள ஸ்திரீகளைக் கொல்லாதே என்று தான் அர்த்தமே தவிர கெட்ட நடத்தையுள்ள ஸ்திரீகள் அந்த சாஸ்திரத்துக்கு விஷயமாகவே ஆகமாட்டார்கள். இந்தத் தாடகையோ கெட்ட நடத்தை உள்ள மூர்க்க ஸ்திரீயாகத் தெரிகிறது. அதனால் தான், "நமது குருவான மஹரிஷி இவளை வதைக்க ஆக்ஞாபனம் செய்கிறார்; அதனால் நாம் செய்யலாம்" என்று நினைத்து ஸ்ரீராமபிரான் தாடகையை வதைத்தார். அது தர்மம் தான் என்பதில் என்ன ஆட்சேபணை?

ஸோமயாகத்தில் செய்கிற பசு ஹிம்ஸை தர்மம் ஆவதுபோல், நியாயாதிபதிகள் கைதியை தண்டிக்கும் தண்டனை தர்மம் ஆவது போலவும், தாடகாவதமும் தர்மம் என்பதில் ஆட்சேபணைக்கே இடமில்லை. தவிரவும், சாஸ்திரமானது சிலதுகள் ஈஸ்வரனுடைய வாக்குகளாகவும், ஈஸ்வரனுடைய தத்வத்தை அறிந்த மஹரிஷிகளுடைய வாக்குகளாகவும் பிரிக்கப்பட்டு இருக்கின்றன. அதனால் சாஸ்திரத்தைக் காட்டிலும் ஈஸ்வரன் மேல் என்பதில் ஆட்சேபணை இல்லை. அந்த ஈஸ்வரனுக்கும் மேலாக சத்குருவை பாராட்டவேண்டுமென்று அந்த சாஸ்திரங்களிலேயே சொல்லப்பட்டு இருக்கிறது. ஈஸ்வரனிடத்தில் அபராதத்தை செய்துவிட்டாலும் குரு கிருபை இருந்தால் அவன் தப்பித்து கொள்ளலாம் என்றும், குருவினிடத்தில் அபராதம் செய்துவிட்டால் ஈஸ்வரகிருபை இருந்தாலும் தப்பித்துக்கொள்ள முடியாது என்று ஸ்பஷ்டமாக சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றதால் எத்தனையோ விதத்தில் ஈஸ்வரனைக் காட்டிலும் குரு மேலானவன். லோகத்தை ப்ரகாசம் பண்ணுவிக்கிற சூரியனைக் காட்டிலும் அவனவனுக்குள்ள கண் மேலானதென்று சொல்லவேண்டுமா? கண்ணில்லாத போனால் சூரியனை எப்படிப் பார்க்க முடியும். லோகத்தை ப்ரகாசம் பண்ணுவிக்கிறது இந்தக் கண். அப்படி இருக்கும்பொழுது சூரியனைக் காட்டிலும் இந்தக் கண் மேலல்லவா. சூரியனைப் போல் ஈஸ்வரனாகுவான். கண்ணைப் போல் குருவாகிறான். அதனால் குருவே மேலானவன். அந்தக் குருவினுடைய வார்த்தையை தர்மமா, அதர்மமா என்று விசாரிக்காமலேயே அதை அனுஷ்டிப்பது உத்தம சிஷ்யன் கடமை ஆகும். அதனால் தான் ஸ்ரீராமனும் தாடகையை குருவசன பலத்தால் வதைத்தார்.

ஜமதக்கினி மஹரிஷியினுடைய பிள்ளையான பரசுராமர் தன் தாயாரான ரேணுகா தேவியை தனக்கு தந்தையாயும் குருவாயு முள்ள ஜமதக்கினி மஹரிஷியின் வார்த்தையை ப்ராமாணமாகக் கருதி ரேணுகையை வதைத்தார் என்று புராண மூலமாகத் தெரிய வருகிறது. ஜமதக்கினி மஹரிஷியினுடைய பூஜைக்கு பிரதிதினமும் அந்த ரேணுகாதேவியானவள் நதியினுடைய மணலை தன் பாதி விரத்ய மகிமையால் குடமாகச்செய்து அதில் தீர்த்தம் கொண்டு வந்து உபசரிக்கிர வழக்கம். ஒருதினம் நதிக்கு போயிருக்கும் காலத்தில் அவள், ஒரு கந்தர்வனை ஆகாச மார்க்கத்தில் பார்த்து, அவனுடைய சௌந்தர்யத்தால் இந்த ரேணுகையானவள் மனக் கலக்கத்தை அடைந்தாள். உடனே, இவளுக்கு பாதி விரத்யபங்கம் ஏற்பட்டது. பிறகு மணலை குடமாகச்செய்ய முடியாதவளாகி விட்டாள். சர்வக்ஞனன ஜமதக்கினி மஹரிஷி இதை ஞான திருஷ்டியினல் அறிந்து தனது பிள்ளையாயும் சிஷ்யனுயுமுள்ள பரசு ராமருக்கு அவளை வதைக்கும்படி ஆக்ஞாபித்தார். உடன் பரசு ராமரும் குருவின் வார்த்தையால் ரேணுகையைத் தன் தாயா ரானலும், வதம் பண்ணிவிட்டார். இதனுல், குருவினுடைய வார்த் தைக்கு மேலான சாஸ்திரமே கிடையாது என்பது சித்திக்கிறது. அதுபோல் தான் ஸ்ரீராமபிரானும் குருவான விச்வாமித்ர மஹ ரிஷிக்கு கௌரவத்தை அளிக்கத் தாடகையை வதைத்தார் என் பது திண்ணம். அத்துடன், அந்தத் தாடகையும், வதத்துக்கு யோக்யமான கெட்ட நடத்தையோடு கூடியவள். அவளுடைய கெட்ட நடத்தை மாத்திரம் அதில் காரணமில்லை. சாஸ்திரத்துக்கும் ஈஸ்வரனுக்கும் மேலான தனது குருவினுடைய வார்த்தையே காரணமாகும். சூர்ப்பனகையை ஸ்ரீராமர் அவமதித்த காலத்திலோ, ஆஞ்சனேயர் இலங்கிணியை ஜெயித்த காலத்திலோ, குருவி

னுடைய ஆக்ஞை என்ற ப்ரமாண சாஸ்திரம் இல்லாததால் சூர்ப்பனகையை ராமரும், இலங்கினியை ஆஞ்சனேயரும் வதம் பண்ணவில்லை. பிர்கிருதத்திலோ தாடகர்வதத்திற்கு குருவினுடைய ஆக்ஞையே ப்ரமாண சாஸ்திரமாகும். ஆகையால் தாடகாவத மானது தர்மம் தான். ஸ்ரீராமபிரான் தர்மாவதாரமானதால் தர்ம மார்க்கத்திற்கு விரோதமாக கொஞ்சம் கூட தவறி போகமாட்டார். ஆகையால் ஸ்ரீராமருடைய ஆசாரத்தையே நாம் அநுஷ்டிப்பதால் நமக்கு ச்ரேயஸு தான். இந்தத் தாடகாவதம் என்ற சரித்திரத்தால் ஆசார்யனுடைய மகிமையும், அவருடைய வாக்கிற்கு ஒரு கௌரவ மும் வெளியாகிறது. இதனல் லோகத்தில் குருபக்தி என்ற ரகசிய மான தர்மம் ப்ரகாசப்படுத்தப்பட்டதாக ஆகும்.

தவிர, இந்தத் தாடகை என்றவள் உண்மையில் ஸ்திரீயே இல்லை. இவள் ஒரு ராக்ஷஸன். அவனுக்கு காலநேமி என்று பெயரானது புராணங்களில் பிரசித்தமாகத் தெரிகிறது. இவன் அதிஉக்ரமான தபஸைச்செய்து பிரம்மாவை தனக்கு சுலபமாக செய்துகொண்டான். பிரம்மா பிரத்யக்ஷமாகி, "உனக்கு வேண்டிய வரத்தைக் கேட்டுக்கொள்ளலாம்" என்று சொல்ல 'ஒரு பிராணி யாலும் எனக்கு வதம் உண்டாகக் கூடாது" என்று கேட்டான். அதற்கு பிரம்மாவோ, "பிறந்தவர்க்கு மரணம் நிச்சயமாக ஏற்படும். ஒரு பிராணிகளாலும் வதம் ஏற்படாமல் உனக்கு எப்படி வரம் கொடுக்க முடியும்?" என்று சொல்லி அவன் கேட்டதற்கு இணங்காமல் இருந்துவிட்டார். ஆகிலும் அவனுடைய தபோ பலத்தைப் பார்த்து, "மிருகம், பக்ஷிகள், ஸர்ப்பம் முதலான ஜந்துக் களாலும் தேவமனுஷ்யாளாலும் உனக்கு வதம் ஏற்படவேண்டாம். ஈஸ்வரனுடைய அவதார மூர்த்தியான மகானுபாவனல் உனக்கு வதம் ஏற்படட்டும் அந்த விதமும் ஏற்படாமல் உனக்கு வஞ்சிக்க

உனக்கு ஒரு உபாயம் சொல்லிக் கொடுக்கிறேன். அதாவது உன்னுடைய இச்சையினாலே உனக்கு ஸ்திரீ ரூபம் எடுத்துக்கொள்ள சக்தி ஏற்பட்டும், அதையும் நான் உனக்கு ஒரு வரமாகக் கொடுக்கிறேன். அந்த ஸ்திரீ ரூபத்தை எடுத்துக்கொண்டு விட்டால் எந்த அவதார புருஷனால் நான் உனக்கு வதத்தைக் கற்பித்திருக்கிறேனோ அந்த அவதார புருஷன் தர்ம ஸம்ஸ்தாபனம் பண்ணுவதற்கு அவதரித்து இருக்கிறபடியாலும், ஸ்திரீ ஜாதியைக் கொல்லக் கூடாது என்ற சாஸ்திரத்தை அறிந்து உன்னைக் கொல்லாமல் விட்டு விடுவான். எப்படியாவது உன்னுடைய கோரிக்கை நிறைவேறி விடும்" என்று பிர்ம்மா இந்த காலநேமிக்கு வரம் கொடுத்து அனுக்ரஹம் செய்தார். அந்தக் காலநேமியும் வரபலத்தால், அவதார புருஷனைத் தவிர மற்ற பிராணிகள் மூலமாக தனக்கு வதம் இல்லாத தைரியத்தாலும், அவதார புருஷனால் ஏற்படுகிற விதத்தையும் ஸ்திரீ ரூபத்தை எடுத்துக்கொண்டு வஞ்சிக்கிற சக்தி இருப்பதினாலும், ரொம்ப கொழுப்பை அடைந்து, ஸ்திரீ வேஷத்தைப் போட்டுக் கொண்டு, தாடகை என்று பெயருடன் உலகத்தில் அங்காங்கு சஞ்சரித்து, மஹரிஷிகளை பாதித்து வந்தான். பிர்ம்மா வரன் கொடுக்கிற காலத்தில் தான் தப்பித்துக்கொள்வதற்கு காலநேமியை வஞ்சித்தாலும், ராமபிரானான அந்த அவதார புருஷனுக்கு அந்த ரகசியம் தெரியாதா? அத்துடன் சர்வக்ஞனான விச்வாமித்ரருடைய உதவியும் இருக்கும்பொழுது அந்தத் தாடகையினுடைய உண்மையை என் அறியமுடியாது? ஆகையால் ஸ்ரீராமபிரானும் இவள் உண்மையில் ஸ்திரீயல்ல. காலநேமி என்ற ராக்ஷஸன். வரபலத்தால் ஸ்திரீ ரூபத்தை எடுத்துக்கொண்டு, ஸ்திரீ வதத்திற்கு ப்ராமாணிகர்கள் நம்மைக் கொல்லமாட்டார்கள் என்று நடித்து வருகிறாள். இவளைக் கொல்வது ஸ்திரீ வதமாக ஆகாது. குருவினுடைய

ஆக்ஞையாகிற ப்ரமாண சாஸ்திரமும் நமக்கு பலமாக ஏற்பட்டு இருக்கிறது. "ஸ்திரீகளைக்கொல்லாதே" என்ற சாஸ்திரத்திற்கு பிரகிருதத்தில் சம்பந்தமே இல்லை. ஆகையால் நாம் செய்கிற இந்தத் தாடகையின் வதமானது தர்ம சாஸ்திரத்திற்கு விருத்தமான ஆசாரமே இல்லை. சம்மதமான தர்மம் தான், என்று ஸ்ரீராமபிரான் நினைத்து தான் அந்தத் தாடகையை வதம் செய்தாரே தவிர, கொஞ்சமேனும் தர்மமில்லாத காரியத்தில் பிரவேசிக்க இல்லை. தாடகையினுடைய வதம் ஸ்திரீ வதமல்ல, புருஷனுடைய வதம் தான், என்று நிரூபணம் பண்ணினதற்கு ஆனந்த ராமாயணமும், ஸ்காந்த புராணமும் பிரமாணமாகும். ஆகையால் தாடகாவதம் பரம தர்மமானதினால் ஸ்ரீராமரிடத்தில் கொஞ்சமேனும் தர்மத்தினுடைய விபரீத நிலைமையை சஞ்சிக்காமல் தர்மமூர்த்தியே ஸ்ரீராமர் என்று தீர்மானித்து, ஸ்ரீராமரை பரமபக்தியோடு பஜித்து ஸ்ரீராமபிரானுடைய ஆசாரத்தை கைகொள்வதே சஜ்ஜனங்களுடைய கடமையாகும்.

ஜாதிபேதம்.

(சித்தாந்தத் தொடர்ச்சி.)

தவிரவும், சூத்திரன் என்ற சப்தத்திற்கு என்ன பொருள் என்று விசாரித்தாலும் அந்த ஜாதியார் சந்தோஷப்படுவார்களே தவிர, தன்னை ஈச்வரன் கீழாக ஸ்ருஷ்டித்திருக்கிறான் என்று கொஞ்சமேனும் மனோவருத்தத்தை அடையமாட்டார்களென்பது திண்ணம். அதாவது, "சுக்"கை வெகு தூரத்திற்கப்பால் விரட்டிக் கொள்கிறான் என்று அந்த பதத்தின் பொருளாகும். 'சுக்' என்றால் வேதத்தை அறிந்து அதைப் படிப்பதினாலும் அதில் சொல்லியிருக்கும் சத்கர்மாக்களை அநுஷ்டிப்பதினாலும் ஏற்படுகிற பெருந்துக்கமாகும். வேதத்தை ஒரு குருவினிடத்தில் படிக்கும் காலத்திலோ, அதில் சொல்லிய கர்மாக்களை அனுஷ்டிக்கும் காலத்திலோ ஏற்படுகிற துக்கத்தை யாராலும் இவ்வளவு தான் என்று கணக்கிட முடியாது. அவ்விதமான துக்கத்தை சூத்ர ஜாதியினிடம் கொடுக்க ஈச்வரனுக்கு ஸம்மதமில்லை. அதற்குக் காரணமோ, நான்காவது குழந்தைகளாக சூத்திர ஜாதியை ஈச்வரன் பாவித்திருப்பதினால் கடைசிக் குழந்தை யிடத்தில் தாய் தகப்பனுக்கு அதிகமான பிரியம் உண்டென்பது உலகப் பிரசித்தமானதாலும், வேதத்தைப்படிக்கிற துக்கத்தையும், கர்மாக்களை அனுஷ்டிக்கிற துக்கத்தையும், சூத்திர ஜாதிகளும் அனுபவிக்க ஈச்வரனுக்கு மனம் வராமல் இருப்பதே ஆகும். எப்படி பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன், என்ற மூவர்களும் வேதத்தைக் கற்றுணர்ந்து, அப்படிப் படிக்கப்பட்ட வேதத்தை மறக்காமலும் உயிர் போகும்வரை வைத்துக்கொண்டிருந்து, அதில் சொல்லியிருக்கும் கர்மாக்கள் முழுமையும் செய்து ஜீவதசையில் மகத்தான துக்கத்தை அனுபவித்து விட்டு,

கிரமமாக ஸத்கதியை அடைகிறார்கள் என்று சொல்லப்பட்டு இருக்கிறதோ, அப்படி சூத்திர ஜாதிகளும் கஷ்டப்பட்டுதான் ஸத்கதியை அடையவேண்டுமென்பது இல்லை. அவர்கள் வேதாத்யயனம் பண்ணவேண்டாம். வேதத்தில் கூறியிருக்கிற ஸத்கர்மாக்களை செய்யவும் வேண்டாம். இந்த ஜீவதசையில் தன்னிஷ்டப்பிரகாரம் ஸுகமாகவும் ஜீவித்துவிட்டு, கடைசியில் முன் சொன்ன மூவர்களும் கஷ்டப்பட்டு அடைகிற ஸத்கதியை அந்த சூத்திர ஜாதிகள் லகுவாக அடைகிறார்கள் என்று தான் சாஸ்திரத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது. ஸத்கதியை அடைவதற்கு கஷ்டமில்லாமல் லகுவாக அடைகிற ஜாதி என்றதைத்தான் சூத்திரன் என்ற சப்தமானது குறிப்பிடுகிறது. அவர்களுக்கு ஸத்கதி இல்லை என்று ஒரு சாஸ்திரத்திலும் சொல்லப்படவில்லை. அத்யயனம் முதலான ஸாதனத்தை அனுஷ்டிப்பதில் சிரமப்படவேண்டாம், என்று தான் சொல்லப்பட்டு இருக்கிறது. இதை உணர்ந்து பார்த்தால் அந்த ஜாதியார் கஷ்டப்படவோ, வருத்தப்படவோ நியாய முண்டோ!

ஒரு பள்ளிக்கூடத்தில் படித்து பரீக்ஷை பாஸ் பண்ணாமலேயே ஒரு பையனுக்கு உத்தியோகம் கிடைத்தால் அவன் ஸந்தோஷப்படுவானா? வ்யஸனப்படுவானா? ஒருவனுக்கு அவனுடைய புத்தி சக்தியையோ, மற்ற வேறு எந்த திறமைகளையோ பார்த்து ரயில்வே கம்பெனியார் "உனக்கு ரயில் உள்ள இடங்களில் டிக்கட் வாங்காமலேயே உன்னிஷ்டம் போல் எந்த கிளாஸ் வண்டியிலும் போகலாம்" என்று உத்திரவு கொடுத்தார்களேயானால் அவன் தன்னை ரொம்பவும் ரயில்வே கம்பெனியார் மதித்து இருக்கிறார்கள் என்று ஸந்தோஷப்படுவானா? அல்லது டிக்கட் வாங்குவதில் எனக்கு என் பாத்தியதை இல்லை என்று கம்பெனியாரை நிந்திப்பானா? அதுபோல்தான் ப்ரகிருதத்திலும் அறியவேண்டும். அறம்,

பொருள், இன்பம், வீடு, என்ற நான்கு விதமான புருஷார்த்தங்களையும், ஸாதனத்தை அனுஷ்டிப்பது என்ற சிரமம் இல்லாமலேயே சூத்திர ஜாதியார் அடையலாம் என்பதை, ஈச்வரனோ, மஹரிஷியோ தங்களுடைய நூல்களில் எழுதி இருப்பதினால் அந்த ஜாதியாரிடம் ஈஸ்வரனுக்கும், மஹரிஷிகளுக்கும், எவ்வளவு பகுமான புத்தி இருப்பது என்பதை அறிந்துகொள்ளாமல் மூடத்தனமாய் எனக்கு என் காயத்திரியில் அதிகாரமில்லை? நான் என் வேதாத்யயனம் பண்ணக்கூடாது? என்று வருந்துகிறார்களே தவிர மற்ற எவையும் அவர்களுடைய வருத்தத்திற்குக் காரணமாகச் சொல்ல முடியாது.

மேலும், எவ்வளவோ பதார்த்தங்கள் உலகத்தில் காணப்படுகின்றன. முதலாவது நவதான்யங்களை எடுத்துக்கொள்வோம். அதுகளில் ஒன்பது விதமான பிரிவுகள் உலகப் பிரசித்தமல்லவா? அந்தப் பிரிவுகளெல்லாம் உற்பத்தியினாலேயே ஏற்பட்டன என்பதில் என்ன ஆக்ஷேபணை. உண்டாகும் பொழுது ஒரு ஜாதி தான்யமாகத்தான் இருந்தது; பிறகு தான் குணகர்மாக்களுக்கு தகுந்தபடி ஒன்பது விதமான பிரிவுகள் ஏற்பட்டன என்று எவனாவது சொல்லுவனா? அப்படி அவன் சொன்னால் யார் தான் அதை நம்புவார்கள். அதுகளுக்குள்ள பிரிவுகள் எப்படி இயற்கையாகவே உற்பத்தியில் ஏற்பட்டதோ, அதுபோல்,பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், என்ற ஜாதியின் வேற்றுமையும் இயற்கையினால் உற்பத்தியிலேயே ஏற்பட்டது என்று ஒப்புக்கொள்வதில் யாருக்கு எவ்விதமான ஆக்ஷேபணைகள் ஏற்படக்கூடும்? ஒரு வஸ்து ஒரே விதமாக இருந்தால், அது வியவகாரத்திற்கு யோக்யமாக ஆகுமா? ஒரு சினிமாவுக்குப் போகிறோம். அங்குள்ள ஆச்சர்யமான நடவடிக்கைகள் ஒரு ஜாதியாக மாத்திரம் இருந்தால்

பிராணிகளுக்கு அதில் ஆத்திரம் எற்பட்டு, அங்கு கூட்டம்கூட நியாயமுண்டா? பல ஜாதியான அநேக விதமான ஆச்சர்யங்களைக் காட்டுகிற சினிமாவில் அல்லவா கூட்டங்களைப் பார்க்கிறோம். அது போலவே, ஒரு கடையில், ஒரே ஜாதியான பதார்த்தம் மாத்திரம் இருந்தால் அங்கேயும் கூட்டத்தைக் காணோம். ங்கும், மளிகைக் கடையோ, ஜவுளிக்கடையோ, கிளப்புகளோ, எல்லாவற்றிலும் பல ஜாதியான வெகு சாமான்கள் இருந்தால் தான், அங்கு வியவகாரமானது மிகவும் அழகாக நடக்கும். இல்லாவிடில் வியவகாரத்திற்கு லோபம் தான். அதுபோல் இந்த உலகமும், ஒரு சினிமாவுக்கு சமானமாகவே நமது வேதாந்த நூல்களில் சொல்லப்பட்டு இருக்கின்றன. அப்படியானால் அதற்குத் தகுந்தபடி பல ஜாதியான அநேக விதமான புருஷர்களும், பல ஜாதியான அநேக விதமான ஸ்தாவர ஜங்கமங்களும் காணப்பட வேண்டியது அவசியமல்லவா? இந்த ஜாதியின் வேற்றுமையையும், சரீரத்தின் வேற்றுமையால் தான் எற்படுகிறது. ஆத்மஸ்வரூபம் எல்லா ஜாதியாருக்கும் ஒன்று தான். அப்படி சரீரத்தை மறந்து ஆத்மஸ்வரூபம் ஒன்று என்ற ஸ்வானு பூதியை அடைந்த பிர்ம்மநிஷ்டர்களுக்கு ஜாதியின் வேற்றுமை இல்லவே இல்லை. அந்த ஸ்வானு பூதிவருகிற வரையிலும், ஆத்மஸ்வரூபம் ஒன்று என்று சாஸ்திரங்களில் கூறப்பட்டிருந்தாலும், பிராணிகளுக்கு, தேகத்திற்கு வேருக ஆத்மா இருக்கிறான் என்ற ஞானமில்லாததனாலும், அனுபவத்தில் தேகமே ஆத்மாவாக விளங்குகிறதினாலும், தேகம் வெவ்வேருக இருப்பதினால் ஆத்மாவும் வெவ்வேறுபோல் தோறுன்கிற அவஸ்தையில் ஜாதியினுடைய வேற்றுமையை கட்டாயம் சகலமான மதஸ்தர்களாலும் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். இல்லாவிடில் வியவகாரமே சித்திக்காது. (தொடரும்.)

A. LAKSHMANASWAMY NAIDU,

Publisher, Rajamundry.

SARASWATHI TAMIL READRES.

(UP TO 8TH STANDARD.)

BY

G. Damodara Mudaliar, B.A.L.T.,

District Educational Officer &

Pandit L. Olaganadha Pillai,

Lecturer in Tamil Sanskrit College Tiruvadi.

சரஸ்வதிதமிழ் வாசக புத்தகங்கள்

முதல் புத்தகம்	0—2—6	நான்காம் புத்தகம்	0—5—0
இரண்டாம் புத்தகம்	0—3—0	ஐந்தாம் புத்தகம்	0—6—0
மூன்றாம் புத்தகம்	0—4—0		

6, 7, 8-ம் புத்தகங்கள் அச்சில் இருக்கின்றன.

சரஸ்வதி சாஸ்திர வாசகங்கள்.

மூன்றாம் புத்தகம்	...	0—3—0
நான்காம் புத்தகம்	...	0—4—0

5, 6, 7, 8-ம் புத்தகங்கள் அச்சில் இருக்கின்றன.

பாலகீதாஞ்சலி

பால கீதாஞ்சலி முதல் புத்தகம்	...	0—2—0
,, இரண்டாம் புத்தகம்	...	0—2—6
,, மூன்றாம் புத்தகம்	...	0—3—0

4, 5-ம் புத்தகங்கள் அச்சில் இருக்கின்றன.

பாரத கதைகள்	(71 பக்கங்கள்)	0—6—0
பாரத வீரர்கள்	(99 பக்கங்கள்)	0—8—0

ENGLISH BOOKS.

	Rs. A. P.
Sarsawathi English Reader First Book	0—3—0
Elementary Education for Indian boys and girls (Calico bound.) by Dr. V. Varahanarasimham M A., Ph. D.	2—0—0

N.B. இப்புத்தகங்கள் எல்லா புத்தகக்கடைகளிலும் கிடைக்கும்.

A. இலட்சுமணசுவாமி நாயுடு,

பப்ளிஷர், ராஜமண்டிரி.

உ

ஸ்ரீராமஜெயம்.

வெங்கடேஸ்வர் பிரஸ்,

24, காக்காத்தோப்புத்தெரு,

மதுரை.

எமது அச்சாபீஸில் உயர்தர அச்சு வேலைகள், பைண்டு வேலைகள், அழகாயும், சுத்தமாயும், குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

சார்ஜ்கள் சகாயம்:—

ஒரு முறை பரிக்ஷித்துப் பாருங்கள்.

S. S. & Co,

பர்னிச்சர் & ஜெனரல் சப்ளையர்ஸ்,

பர்னிச்சர் பிரைஸ் சீட்டு.

பொது ஜனங்களுடைய சௌக்கரியத்தை முன்னிட்டு ஷ பிரைஸ் சீட்டு நடத்தத் தீர்மானித்திருப்பதால் ஷ சீட்டில் சேர்ந்து லாபம் அடையும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

எஸ். எஸ். அன் கோ.,

புரோப்ரைட்டர்,

மேலப்பெருமாள் மேஸ்திரி வீதி, மதுரை

மற்ற விபரங்களுக்கு மேல்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

"ஸன்மார்க ப்ரதர்சினீ"

மதுரை.

(ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் முதல் தேதியில் வெளிவரும்.)

சந்தா விகிதம்.

வருட சந்தா	ரூ	1—0—0
6 மாத சந்தா	ரூ	0--12—0
தனிப் பிரதி	ரூ	0—2—0
வெளியூர்களுக்கு வருஷசந்தா	ரூ	1—6—0

சந்தாதார்களுக்கு சேர்ந்த வருஷத் துவக்கத்திலிருந்து தான் சஞ்சிகை அனுப்பப்படும்.

1. சந்தாத் தொகையை முன் பணமாகவே மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டும்.
2. விலாஸ மாறுதல்களுக்கு, சந்தா எண்ணைக்குறித்து புதிய விலாஸத்தைத் தெரிவிக்க வேண்டும்.
3. கடிதப் போக்குவரத்துக்களுக்கு, பதில் வேண்டுவோர், தபால் சிலவு அனுப்ப வேண்டும்.

விளம்பர விகிதம்.

ராப்பர் முழுப்பக்கம்	ரூ	5—0—0
தடவை 1-க்கு முழுப் பக்கத்திற்கு	ரூ	3—0—0
,, அரை பக்கத்திற்கு	ரூ	2—0—0
,, கால் பக்கத்திற்கு	ரூ	1—0—0

மானேஜர்,

"ஸன்மார்க ப்ரதர்சினீ" ஆபீஸ்,

14, வடக்குச்சித்திரை வீதி,

மதுரை.

குறிப்பு:—1. மற்ற விபரங்களுக்கு கடிதம் எழுதவும்.
2. சாஸ்திரங்களுக்கு விரோதமில்லாத விளம்பரங்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

Printed at the Venkateswar Press, Kakatope st, Madura: